பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை 10 சனிக்கிழமை (25-11-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:296

# ஒஸ்லோவில் அடுத்த வாரம் அரசு - புலிகள் நேரில் பேச்சு!

## திருமணமான முதலாவது பெண் மாவீரர்!

வவுனியா, நவ.25

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் எல்லைப்படையைச் சேர்ந்த திருமணமான பெண் உறுப்பினர் ஒருவர் கடந்த 20ஆம் திகதி கிளாலிப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் உயிரிழந்துள்ளார் என விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

இதன் மூலம் திருமணமான முதலாவது பெண் மாவீரர் உருவாகியுள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிவராசா தெய்வானை (பரந்தன்)

(10ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் தரப்பு நிலைப்பாடு குறித்து தீர்மானிக்க லண்டனில் உயர்மாநாடு

லண்டன்,நவம்பர்25

**இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக இலங்கை அரசின் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் முதற்கட்டப் பேச்சுக்கள் பெரும்பாலும் அடுத்த வாரமளவில் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறலாம் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.**

**இந்தப் பேச்சுக்களில் தமிழர் தரப்பில் முன்வைக்கப்படவேண்டிய விடயங்கள் குறித்து ஆராய்வதற்காக - புலிகளின் ஏற்பாட்டில் - உயர்மட்ட முன்னோடிக் கலந்துரையாடல் ஒன்று இன்றும் நாளையும் லண்டனில் நடைபெறவிருக்கின்றது.**

இந்தக் கலந்துரையாடலில் மேற்கு நாடுகளில் உள்ள இலங்கைத் தமிழ் கல்விமான்கள் மற்றும் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் கலந்துகொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கலந்துரையாடலில் அமெரிக்கா, லண்டன், கனடா, ஆஸ்திரேலியா, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இயங்கும் ஈழத் தமிழ் அமைப்புக்களின் சார்பில் பிரதிநிதிகள் பங்குபற்றுவர்.

ஒவ்வொரு நாட்டிலிருந்தும் தலா இரு பிரதிநிதிகள் கலந்துரையாட

(10ஆம் பக்கம் பார்க்க)

## சொல்ஹெய்ம் ~ கதிர்காமர் தொலைபேசியில் தொடர்பு

கொழும்பு,நவ.25

இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நகர்வுகளில் ஓர் அங்கமாக இந்தியாவில் தங்கியுள்ள நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்மும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் அடிக்கடி தொலைபேசியில் உரையாடி வருகின்றனர் என்றும்-

சமரசப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக இருவரும் பேச்சு நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் - லண்டனில் தங்கியுள்ள விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையே தொடர்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவித்தன.

(இ-3)

## பேச்சுக் குறித்து பிரபாவிடமிருந்து சாதகமான சமிக்ஞை கிடைக்குமா?

### அரசு எதிர்பார்த்திருப்பதாக பீற்றர் ஹெய்ன் தெரிவிப்பு

கொழும்பு,நவ.25

மாவீரர் தினத்தையொட்டி விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நிகழ்த்தவிருக்கும் உரையை இலங்கை அரசாங்கம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. அந்த உரையில் ஏதாவது சாதகமான சமிக்ஞை கிடைக்குமா என்று அது எதிர்பார்த்து இருக்கின்றது.

மேற்கண்டவாறு பிரிட்டனின் வெளிவிவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் பீற்றர் ஹெய்ன் தெரிவித்தார்.

இலங்கையில் விஜயம் மேற்கொண்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கைதானவரை விடுவிக்கக் கோரி

## தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் போராட்டம்!

யாழ்ப்பாணம்,நவ.25

மந்துவில் பகுதியில் வைத்து கடந்த 4 ஆம் திகதி படையினரால் கைதுசெய்யப்பட்ட இராசையா ஸ்ரீரங்கநாதன் என்ற மாணவனை விடுதலை செய்யக்கோரி யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டம் ஒன்றை நேற்றுமுதல் ஆரம்பித்துள்ளனர்.

மேற்படி பகிஷ்கரிப்புப் போராட்டம் காரணமாக தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்றுவந்த செயன்முறைப் பரீட்சைகளும் தடைப்பட்டன.

நேற்றுக்காலை தொழில்நுட்பக் கல்லூரிக்கு வந்த மாணவ, மாணவிகளும் வகுப்புகளுக்குச் செல்லாது கல்லூரி முன்றலில் கொட்டும் மழையின் மத்தியிலும் பல்வேறு சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு அமர்ந்திருந்தனர்.

பின்னர் அங்கிருந்து முற்பகல் 11 மணியளவில் மேற்படி மாணவனை விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.அரச அதிபரிடம் கோரும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி லண்டன் பயணமானார்!

கொழும்பு,நவ.25

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று அதிகாலை லண்டன் பயணமானார்.

அவர் லண்டன் புறப்பட முன்னர் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க பதில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக அவருக்கு முன் சத்தியப் பிரமாணம்

(10ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்பயணம்

## மறு அறிவித்தல் வரை ஒரு சேவை மட்டுமே!

யாழ்ப்பாணம்,நவ.25

பலாலி - இரத்மலானைக்கு இடையே மறு அறிவித்தல் வரை ஒரு விமானசேவையே இடம்பெறும் என்று யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக விமானத்திற்கு பயணிகளைப் பதிவு செய்யும் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என்று வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார

(10ஆம் பக்கம் பார்க்க)

## அப்பாவிகளுக்கு எதிராகத் தமது ஆயுதங்களை பொலீஸார் பயன்படுத்த அனுமதிக்க முடியாது

### கஸ்தூரியார் வீதிச் சம்பவம் தொடர்பான உத்தரவில் யாழ்.நீதிவான் உறுதிபடத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.25

"யாழ்.குடாநாட்டில் கடமையாற்றும் பொலீஸாரின் பாதுகாப்புக் குறித்து இந்த நீதிமன்றம் அக்கறைப்படும் அதேவேளையில், குடாநாட்டில் கடமையாற்றும் பொலீஸார் தமது கையில் உள்ள ஆயுதங்களை அப்பாவி மக்களுக்கு எதிராகப் பிரயோகிப்பதை இந்த நீதிமன்றம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது."

- இவ்வாறு தமது உத்தரவு ஒன்றில் குறிப்பிட்டிருக்கின்றார் யாழ். மாஜிஸ்திரேட் இ.த.விக்னராஜா.

கடந்த திங்களன்று யாழ்.கஸ்தூரியார் வீதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இருந்த இரு பொலீஸாரை இனந்தெரியாதோர் சுட்டுவிட்டுத் தப்பியோடியதும் -

அதில் ஒரு கான்ஸ்டபிள் உயிரிழக்க, காயமடைந்த மற்றைய கான்ஸ்டபிள் வீதிக்கு ஓடிவந்து திருப்பிச் சுட்டதில் காருக்குள் அமர்ந்திருந்த முரளிதரன் என்பவர் உயிரிழந்ததும் தெரிந்தவையே.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட

(9ஆம் பக்கம் பார்க்க)

## எழுச்சி நாள் நிகழ்வுகள் இன்று காலை ஆரம்பம்

வவுனியா,நவ.25

மாவீரர் வாரத்தின் எழுச்சி நாள் நிகழ்வுகள் இன்று காலை 8.30 மணிக்கு தேசிய கொடியேற்றலுடன் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளன என்று விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)




**படையினரால் கைதுசெய்யப்பட்ட யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவன் இராசையா ஸ்ரீரங்கநாதனை விடுதலை செய்யக் கோரி தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் கல்லூரிக்கு முன்பாக பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படங்கள்.**

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## நீரிழிவு விழிப்புணர்ச்சி மாதத்தை முன்னிட்டு

நல்லூர் லயன்ஸ் கழகம் நடத்தும்
இலவச மருத்துவ முகாம்
**லயன் Dr.S.S.அருளானந்தம்**
(மாவட்டத் தலைவர், நீரிழிவு விழிப்புணர்வு)
**தலைமையில்**

இடம் : பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா சேவா நிலையம், இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: நாளை (26.11.2000) ஞாயிறு காலை 10.00 மணி.

இந்த இலவச மருத்துவ முகாமில்
*நீரிழிவுப் பரிசோதனை, இரத்த அழுத்தப் பரிசோதனை, பொது மருத்துவப் பரிசோதனை மற்றும் கண் பரிசோதனை என்பன நடைபெறும்.*

வறுமைக் கோட்டுக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கு வாசிப்பதற்குரிய கண்ணாடிகள் வழங்கப்படும். பயன்பெற விரும்புவோர் தங்கள் பெயர்களை முன்கூட்டியே பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா சேவா நிலையத்தில் பதிவு செய்து கொள்ளவும்.

K.ஜெயரட்ணம் — தலைவர்.
இ.இராஜகுலேந்திரன் — செயலாளர்.
(80872)



## WESTERN UNION MONEY TRANSFER
## வெஸ்ரேன் யூனியன் பணம் மாற்றுதல்

உலகின் எப்பாகத்திலிருந்தும் WESTERN UNION MONEY TRANSFER ஊடாக யாழ். குடாநாட்டிற்கு பணம் அனுப்பினால் அன்றைய தினமே பணம் உரியவர்களுக்கு வழங்கப்படும். பணத்தைப் பெறுவதற்கு பின்வரும் விவரங்களுடன் கீழ்வரும் முகவரிடம் தொடர்பு கொள்ளவும்.

1. பணம் அனுப்பியவர் பெயர்.
2. பணம் பெறுபவர் பெயர், விலாசம், அடையாள அட்டை இலக்கம்.
3. பணம் அனுப்பிய நாட்டின் பெயர்.
4. அனுப்பியவருக்கு வங்கியால் வழங்கப்பட்ட இரகசிய இலக்கம்.
5. அனுப்பிய தொகை.

**விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்.**

*யாழ். ஏக முகவர்:*
WESTERN UNION MONEY TRANSFER,
MAHALUXMY STORES,
212, STANLEY ROAD,
JAFFNA.

*எம்மிடம் மோட்டார் சைக்கிள், ஓட்டோ உதிரிப்பாகங்கள் சில்லறையாகவும், மொத்தமாகவும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.*

தொ.பே.இல.: 2024, 2025
பக்ஸ்: 2134

**மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்,**
*212, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(c/13965)


## பாராட்டி வாழ்த்துகிறோம்



உயர்திரு.
**சின்னையா நடராஜலிங்கம்**
(AREA MANAGER, BANK OF CEYLON- JAFFNA)

அன்பும் பண்பும் நிறைந்த எங்கள் பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர்,யாழ் பிராந்திய முகாமையாளராக (AREA MANAGER) பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர் நீண்ட காலம் வாழ்ந்து மக்கள் சேவைபாற்ற வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர்:
**யோகாஸ் கிறீம் ஹவுஸ்,**
**தீபன் தொலைத் தொடர்பகம்**
**தொலைபேசி இல: 070-212499**

*கந்தமுருகேசனார் சிலையடி,*
*மந்திகை,*
*புலோலி.* (c/13967)

## சமுர்த்தி செயலணிகள் அமைப்பு

யாழ்ப்பாணம்,நவ.25

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சமுர்த்தி செயலணிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஒன்பதாம் திகதி ஜே-3 கிராமசேவகர் பிரிவிலும், கடந்த 22ஆம் திகதி ஜே-4, ஜே-5 ஆகிய கிராமசேவகர் பிரிவுகளிலும் சமுர்த்திச் செயலணிகள் அமைக்கப்பட்டதாக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான சமுர்த்தித் தலைமை முகாமையாளர் கு.கருணாநிதி தெரிவித்தார்.

மேற்படி சமுர்த்திச் செயலணிகள் மூலம் சமுர்த்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

இதன் ஆரம்பக் கட்டமாகவே கிராமசேவகர் பிரிவு தோறும் சமுர்த்திச் செயலணிகள் அமைக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறைப் பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகத்தின் அனுசரணையுடன் இந்தச் செயலணிகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## புலமைப்பரிசில் பெறும் மாணவருக்கு

சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் ஐந்தாம் ஆண்டில் புலமைப்பரிசில் பெறும் மாணவர்கள், 2000 ஆம் ஆண்டில் தங்கள் பாடசாலை வரவு விவரங்களை எதிர்வரும் 29ஆம் திகதி புதன் கிழமைக்கு முன்னர் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் இயங்கும் மேற்படி பாடசாலையில் சமர்ப்பிக்குமாறு பாடசாலை அதிபர் மு.பாலசுப்பிரமணியம் கேட்டுள்ளார். (ஐ-8)

## இறந்தோர் விவரம் சேகரிப்பு

வலி.மேற்கு,நவ.25

யாழ்.மாவட்டம் முழுவதும் இந்த ஆண்டு மே மாதத்திற்குப் பின்னர் வன்செயல்களினால் இறந்தவர்கள், காயமடைந்தவர்கள் ஆகியோரின் விவரங்கள் கிராம உத்தியோகத்தர்களினால் திரட்டப்பட்டு வருகின்றன. (ஐ-175)

## வீட்டுத் திட்ட பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள்

வலி.கிழக்கு,நவ.25

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன (ஜீ.ரி.இஸட்) வீட்டுத் திட்ட பயனாளிகளுக்கான 3ஆம் கட்டக் கொடுப்பனவுகள் எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படும் என பிரதேச செயலர் கே.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

புத்தூர் கிழக்கு, ஆவரங்கால் கிழக்கு, சிறுப்பிட்டி கிழக்கு ஆகிய கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளைச் சேர்ந்த 63 பயனாளிகளுக்கே இக்கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன. (ம-180)


**நாகம்ஸ் கன்னாகம்**
அர்ஜுன்,ரோஜா, ரம்பா,ஆனந்தராஜ் நடித்த
**அடிமைச்சங்கிலி**
(தினசரி) காட்சிகள் – 11.00, 2.30 (பு.நே.)

**லஷ்சுமி இணுவில்**
அர்ஜூன்,ரம்பா, நடித்த
இரண்டாவது வாரமாக
**சுதந்திரம்**
காட்சிகள் – 10.30, 2.30 (பு.நே.)

**ராஜா யாழ்ப்பாணம்**
விஜய், சிம்ரன், மணிவண்ணன்
மற்றும் பலரின் நடிப்பில் இனிய பாடல்கள் கொண்ட
**துள்ளாத மனமும் துள்ளும்**
காட்சிகள்:10.30, 2.00 (பு.நே.)


## பாராட்டி வாழ்த்துகிறோம்



**லயன் சி.ந.கதிர்வேலு J.P.**
(காப்புறுதி அமைப்பாளரும் யாழ்ப்பாண லயன்கழகத்தின் 25ஆவது தலைவரும், தேனாவளவு, கரவெட்டிமேற்கு, கரவெட்டி)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கரவெட்டியில் தற்போது வசிப்பவருமான திருவாளர் லயன் கதிர்வேலு அவர்கள் காப்புறுதிச் சேவையில் 20 வருடங்களுக்கு மேல் தனக்கென ஒரு தனியிடத்தை வகித்து வருகிறார்.

இவர் நேற்று (24-11-2000) வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்ட நீதிபதி திரு K.T.விக்னராஜா முன்னிலையில் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக (J.P) சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

அவரது சேவை லயன், காப்புறுதிச் சேவை என்பனவற்றோடு மட்டுமல்லாமல் சமூக சேவையிலும் சிறந்து விளங்கி மென்மேலும் வளர வாழ்த்துகின்றோம்.

*அவரின் காப்புறுதி முகவர்கள்:*
1. லயன் லூயிஸ் ரபாயேல்.
2. திருமதி ஞானரஞ்சிதம் யசோதரன்.
3. திரு. P. தேவநாயகம்.
4. திரு. வே. நந்தகுமார்.
5. திரு. அ. சிவகாந்தா.

பட்டினசபை வீதி,
சங்கானை.
(80864)


## தொழில் நுட்ப உத்தியோகத்தர் தேவை

தீவுப் பகுதிகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை, அங்கு தங்கியிருந்து மேற்பார்வை செய்யக் கூடிய தொழில் நுட்ப உத்யோகத்தர் தேவை.

தொடர்பு: விள.இல.1146, மே/பா உதயன். (80874)


## பாராட்டிக் கௌரவிக்கின்றோம்



**உயர்திரு.நன்னித்தம்பி இராஜரத்தினம்**

*நாகம்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகரும் உரிமையாளருமாகிய ந.இராஜரத்தினம் அவர்கள் 17.11.2000 அன்று யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக பதவிப் பிரமாணம் செய்ததையிட்டு அவருடைய பணி இன்றுபோல் என்றும் தொடர மனமகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.*

நாகம்ஸ் பாட்டா
மற்றும் ஸ்தாபனங்களின்
ஊழியர்கள்.
(80870)

## மரண அறிவித்தல்

### இராமு வினாசித்தம்பி

கொட்டடி, கற்குளத்தைச் சேர்ந்த இராமு வினாசித்தம்பி 22.11.2000 அன்று கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் நாகம்மாவின் அன்புக் கணவரும், தர்மகுலசிங்கம் (குமார்-கனடா), கலா (சுவிஸ்), பவானி (சுவிஸ்), காஞ்சனா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜீவன் (சுவிஸ்), வரதன் (சுவிஸ்), அகிலா (அளவெட்டி), மஞ்சுளா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஈசனின் பெரியப்பாவும், கீர்த்தனன் (அளவெட்டி), பிரகாஸ் (சுவிஸ்), அபினயா (சுவிஸ்), விதுஜா (சுவிஸ்), வியாசன் (சுவிஸ்), வசீதரன் (சுவிஸ்), நிவேதன் (சுவிஸ்), நிவேதிகா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பில் 22.11.2000 அன்று தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

*சேச் லேன்,*
*தாவடி, கொக்குவில்.* (80869)

தகவல்:
க.யோகராசா (பெறாமகன்)

# புலிகளோடுதான் பேசவேண்டும்; இதுவே ஐ.தே.கவின் நிலைப்பாடு!

## அக்கட்சியின் எம்.பி. மகேஸ்வரன் கூறுகின்றார்

"இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளோடுதான் பேசவேண்டும். இதுதான் ஐ.தே.கட்சியினதும், கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினதும் நிலைப்பாடாகும்."

- இவ்வாறு தெரிவித்தார் அக்கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன்.

கட்சியின் இந்த நிலைப்பாடு குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.தே.கட்சித் தலைமைப்பீடம் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துத் தமிழ்க் கட்சிகளுடனும் உரையாடியுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஆகியவை மூன்றும் - ஈ.பி.டி.பி. தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் அனைத்தும் - அரசு புலிகளுடன் மட்டும் பேசுவதன் மூலமே சமாதானத் தீர்வைக் காணமுடியும் என்று கருதுகின்றன.

நான் உட்பட ஐ.தே.கட்சியிலுள்ள அனைத்துத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதே கருத்தையே கொண்டுள்ளோம். கட்சியிலுள்ள ஏனைய எம்.பிக்களில் மிகப் பெரும்பாலானவர்களும் இதே கருத்தைத்தான் கொண்டுள்ளனர்.

எனவே புலிகளோடுதான் அரசு பேசவேண்டும் என்ற நிலைப்பாட்டையே ஐ.தே.கட்சி எடுத்துள்ளது.

இது தொடர்பான எனது நிலைப்பாட்டை இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பிரிட்டனின் வெளி விவகாரங்களுக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சருக்கு நான் எழுத்து மூலம் சமர்ப்பித்துள்ளேன்.

- இப்படி அவர் கூறினார். (உ)

## கோப்பாயில் ஆலய மணிகளை ஒலிப்பதற்குத் தடை விதிப்பு

கோப்பாய்ப் பிரதேசத்திலுள்ள பெரும்பாலான இந்து ஆலயங்களிலும், கிறிஸ்தவ தேவாலயங்களிலும் உள்ள மணியை மறு அறிவித்தல் வரை அடிக்கவேண்டாம் என படையினர் அறிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆலயங்களுக்குச் சென்ற படையினர் மறுஅறிவித்தல்வரை ஆலயங்களில் மணியை அடிக்காது பூஜையை நடத்துமாறு - காலை, மதியம், மாலை போன்ற நேரங்களில் அடிக்கப்படும் மணிகளையும் அடிக்கவேண்டாம் எனவும் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

இதனால் தற்போது ஆலயங்களில் பூஜைகள், ஆராதனைகள் மணி அடிக்காமலே இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது.

மாவீரர் வாரத்தை ஒட்டி அப்பகுதிப் படையினர் மேற்கொண்ட முற்பாதுகாப்பு நடவடிக்கையாக இது இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. (ம-8,72)

## தமிழ்க் கைதிகள் தங்கியுள்ள சிறைகளுக்குப் பாதுகாப்பு

### பொலீஸாருக்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு,நவ.25

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களின் பாதுகாப்புத் தொடர்பாக சிறைச்சாலைத் திணைக்கள ஆணையாளர் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பொலீஸ்மா அதிபருக்கும், இராணுவத் தளபதிக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டுள்ளார்.

பண்டாரவளைத் தடுப்பு முகாம் படுகொலைச் சம்பவங்களை அடுத்து தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள களுத்துறை, பூசா, வெலிக்கடை தடுப்பு முகாம்களின் பாதுகாப்பு ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் பலப்படுத்தப்பட்டுள்ளதாகச் சிறைச்சாலைத் திணைக்கள ஆணையாளர் உபாலி சமரசுந்தர தெரிவித்தார். (ஐ-8)

## நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்த சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இளம் குடும்பத்துக்கு குடாநாட்டின் சமூகத்தின் சார்பில் தினைத்துணையேனும் கைம்மாறு செய்யும் ஒரு முயற்சியை 'உதயன்' ஆரம்பித்திருக்கின்றான் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

பத்திரிகைப் பணிக்காக தனது குடும்பத் தலைவனையே பறிகொடுத்த அந்த இளம் குடும்பத்துக்கு குடாநாட்டுச் சமூகம் தனது பங்களிப்புமிக்க ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

★ உதவி நிதியை நேரில் 'உதயன்' பணிமனையில் பணமாகக் கையளிப்போருக்கு உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது.

★ காசோலை மூலமாக அனுப்ப விரும்புவோர் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள **C/A 2358** ஆம் இலக்கக் கணக்குக்கு அனுப்பவும். வெளிமாவட்டங்களில் இருந்து நன்கொடை அனுப்புவோர் மேற்படி கணக்கு இலக்கத்துக்குத் தொலைநகல் மாற்றம் (Fax Transfer) மூலம் அனுப்பவும்.

★ மேற்படி நிதிக்குப் பணம் சேகரிப்பதற்கு வெளியார் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

★ நன்கொடை வழங்குவோரின் பெயர், விவரம் உதயனில் பிரசுரிக்கப்படும். பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கு உரிய முறையில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு தொகை விவரம் பெயரின்றியே வெளியிடப்படும்.

குறிப்பு:- இந்நிதிக்குப் பணம் சேகரிப்பதாகக் கூறி சில மோசடியாளர்கள் படிவங்களைத் தயாரித்து பொதுமக்களிடம் நன்கொடை கேட்டுச் செல்வதாக அறியவந்துள்ளது. இது விடயத்தில் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**23.11.2000 (வியாழக்கிழமை) வரை கிடைத்த நிதி:-**

| | | | ரூபா |
|---|---|---|---|
| | முன்கொண்டுவரப்பட்டது | - | 915,444 |
| 1. | மு.பஞ்சநாதன் - இணுவில் கிழக்கு, இணுவில் | - | 200 |
| 2. | ஓர் அன்பர் - வரணி | - | 100 |
| 3. | எஸ்.எஸ்.மரியதாஸ் - அச்சக வீதி, யாழ்ப்பாணம் | - | 500 |
| 4. | ஓர் அன்பர் - வடலியடைப்பு | - | 200 |
| 5. | க.இராசரத்தினம் - அராலி | - | 200 |
| 6. | மு.திருநாமம் - சங்கரத்தை | - | 100 |
| 7. | க.நவரத்தினம் - சங்கரத்தை | - | 100 |
| 8. | திரு.சின்னராசா - சங்கானை | - | 100 |
| 9. | திரு.தவம் - இளவாலை | - | 100 |
| 10. | ஓர் அன்பர் - பருத்தித்துறை | - | 100 |
| 11. | அதிபர், ஆசிரியர்கள், இணைந்த ஆசிரியர்கள் - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை | - | 2,401 |
| 12. | அதிபர், ஆசிரியர் - யாழ்.வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம் | - | 1000 |
| | மொத்தம் | - | 920,545 |



நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் அண்மையில் சமூகக் கல்வி தின விழா நடைபெற்றது. இதனையொட்டி மிகப் பெரிய அளவில் அமைக்கப்பட்ட பூமிக் கோளத்தைப் படத்தில் காணலாம். 220 சென்ரிமீற்றர் உயரமும் 450 சென்ரிமீற்றர் சுற்றளவும் கொண்ட இப் பூமிக் கோளத்தை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் ம.பார்த்தீபன் வடிவமைத்திருந்தார். நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகமும் ஆசிரியர்களும் படத்தில் உள்ளனர். (ஐ-7)

### அரசு - புலிகள் பேச்சுப்பற்றி

## முஸ்லிம் காங்கிரஸுடனும் கலந்தாலோசிக்க வேண்டும்!

### பிரிட்டிஷ் அமைச்சரிடம் ஹக்கீம் வலியுறுத்து

கொழும்பு,நவ.25

இனப்பிரச்சினை விவகாரத்தில் அரசுக்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுக்கள் குறித்து முஸ்லிம் காங்கிரஸுடனும் கலந்தாலோசிக்கப்பட வேண்டும்.

முஸ்லிம் காங்கிரஸின் இணைத் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இலங்கை வந்துள்ள பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹெய்னிடம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த புதன்று காலை கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்தில் பீற்றர் ஹெய்னைச் சந்தித்துப் பேசுகையில் ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் தொடரும் யுத்தத்தினால் தமிழ், சிங்கள மக்கள் மட்டுமன்றி முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இனப்பிரச்சினை விவகாரத்தில் அரசு காணும் தீர்வில் முஸ்லிம்களின் நலன்களும் உள்ளடக்கப்பட வேண்டும்.

இனப்பிரச்சினை விடயத்தில் நாம் தெளிவாக இருக்கிறோம். இந்தியாவின் பங்களிப்பும் இந்த விவகாரத்தில் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும் என்று அவர் தெரிவித்தார். (ஐ-8)

## மீன் சந்தை புனரமைப்பு

யாழ்ப்பாணம்,நவ.25

சங்கானை மீன் சந்தை விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

பிரமாண அடிப்படையிலான நிதியுதவித் திட்டத்தின் கீழ் இந்த மீன் சந்தையின் புனரமைப்புக்கென 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வலி.மேற்குப் பிரதேசசபைத் தலைவரும் ஈ.பி.டி.பியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளருமான ந.திரிலோகநாதன் தெரிவித்தார். (ஐ-7)



வடமராட்சி வடக்குப் பிரதேச கலாசார பேரவையின் பிரதேச சாஹித்திய பரிசளிப்பு விழாவும், கலைஞர்கள் கௌரவிப்பு விழாவும் பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

விழாவில் தென்புலோலியூர் நாடகச் சக்கரவர்த்தி கே.பி.பரராஜசிங்கத்தின் 30 வருடங்களுக்கு மேலான கலைப்பணியைப் பாராட்டி தீவகக் கல்விவலய நிர்வாக அதிகாரி எஸ்.மெற்றாஸ்மயில் கிரீடம் அணிவித்துப் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதை முதலாவது படத்திலும் துன்னாலையூர் எஸ்.ரி.கண்ணதாசக்குருக்களின் 25 வருட கலைப்பணியைப் பாராட்டிக் கௌரவித்து கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை சான்றிதழ் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

*(படம்:- வடமராட்சி செய்தியாளர்)*

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,நவ.25

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான அவசர ஒன்றுகூடல் ஒன்று எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை காலை 10மணிக்கு ஆரியகுளம் பகுதியில் உள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்தில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் குறித்து ஆராயப்பட உள்ளதால் அனைத்து பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும் வருகை தருமாறு சங்கம் கோரி உள்ளது. சமுகமளிக்காதவர்களின் விவரங்கள் சங்கத்தில் பதிவு செய்யப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

## ரூ.2 ஆயிரம் கொடுப்பனவு

வலி.தென்மேற்கு,நவ.25

வலிகாமம் தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெறத் தவறியவர்களில் முதல் பத்துத் தொகுதிகளில் இடம்பெற்றுள்ளவர்களுக்கு இன்று சனிக்கிழமை, நாளை ஞாயிற்றுக்கிழமை ஆக இரு நாள்களும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை சங்கானை மக்கள்வங்கிக் கிளையில் கொடுப்பனவு வழங்கப்படும் என்று உதவித் திட்டப் பணிப்பாளர் எம்.பாலசிங்கம் அறிவித்துள்ளார். (ஓ-185)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




### கிருபானந்தன் கனிஸ்ரா

அராலி தெற்கைச் சேர்ந்த *கிருபானந்தன் - சுகன்னியா தம்பதிகளின் செல்வப் புதல்வி கனிஸ்ரா* தனது முதலாவது பிறந்த நாளை இன்று (25.11.2000) சனிக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை மொரீஷ் இல் வசிக்கும் அன்பு அப்பா மற்றும் அராலியில் வசிக்கும் அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார், மாமாமார், அத்தைமார், அத்தான்மார், அக்காமார், அண்ணாமார், மச்சி, தம்பி, தங்கை மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் அராலி முத்துமாரி அம்பாள் அருளால் சகல கலைகளும் பெற்று நலத்தோடு பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

*அராலி.* (80778) **தகவல்: ஆதி அத்தான்**

# கோழியைத் திருகிக் கொன்ற எலிசபெத் ராணிக்குக்கண்டனம்

லண்டன், நவ. 25

பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத வண்ணகோழி ஒன்றின் கழுத்தைத் திருகிக் கொன்றதனால் விலங்குரிமை ஆர்வலர்களின் கண்டனங்களுக்கு ஆளாகியுள்ளார்.

சமீபத்தில் பிரிட்டிஷ் அரச தோட்டமான சன்ரிக்ஹாமில் அரச குடும்பத்தினர் வேட்டையில் ஈடுபட்டிருந்தபோது துப்பாக்கியால் சுடப்பட்ட வண்ணக்கோழி ஒன்று தரையில் விழுந்து உயிருக்குப் போராடியது. அந்தக் கோழியை - இளவரசர் பிலிப் மற்றும் விருந்தினர்கள் முன்னிலையில் - தலையைத் திருகி மகாராணி கொன்றதாக 'சண்டே பீபிள்' என்ற பிரிட்டிஷ் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. ராணி எலிசபெத் கோழியின் கழுத்தைத் திருகும்போது எடுக்கப்பட்டிருந்த புகைப்படத்தையும் அது பிரசுரித்திருந்தது.

இதனையடுத்தே 74 வயதான மகாராணியின் இரக்கமற்ற செயல் இது என்று விலங்குரிமை ஆதரவாளர்கள் ராணிக்கு எதிராகக் கண்டனக் குரல் எழுப்பி வருகின்றனர்.

உயிருக்குப் போராடிய பறவையைக் கொன்றது கருணையின் அடிப்படையிலானது என்று அரச குடும்ப வட்டாரங்கள் ராணியின் தரப்பில் வாதிடுகின்றன.

(ஓ-6)

# மற்றொரு 'கவுண்டி'யிலும் மறுவாக்கு எண்ணும் கோரிக்கை நிராகரிப்பு!

## அல்கோருக்குப் பின்னடைவு

வாஷிங்டன், நவ. 25

அமெரிக்க அதிபர் தேர்தலில் புளோரிடா மாகாண மியாமிடாரிக் கவுண்டி வாக்குகளை ஆள்கள் மூலம் எண்ணுவதற்கு புளோரிடா உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

புளோரிடா மாகாணத்தில் உள்ள ஏனைய கவுண்டிகளில் ஆள்கள் மூலம் மறு வாக்கு எண்ணிக்கை நடத்தப்பட்டதை அடுத்து மியாமிடாரிக் கவுண்டியிலும் ஆள்கள் மூலம் மறுவாக்கு எண்ணிக்கை நடத்தப்பட வேண்டும் என்று ஜனநாயகக் கட்சி வேட்பாளர் அல்கோர் மனுச் செய்திருந்தார்.

ஆனால் முன்னர் எடுத்த முடிவுக்கு மாறாகக் கால அவகாசம் போதாது என்பதால் இந்தக் கவுண்டியின் மறு வாக்கு எண்ணிக்கையைத் தடை செய்வதாக நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது

இந்தத் தீர்ப்பு ஜனநாயகக் கட்சி ஆதரவாளர்களுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மியாமிடாரிக் கவுண்டி அல்கோரின் பலமான கோட்டை என்பதால் அங்கு ஆள்கள் மூலமான மறுவாக்கு எண்ணிக்கையை நடத்துவதில் ஜனநாயகக்கட்சி ஆதரவாளர்கள் தீவிரமாயிருக்கிறார்கள்.

இதனால் இந்தத் தீர்ப்பை எதிர்த்து ஜனநாயகக் கட்சி மேன்முறையீடு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை—

போவேர்ட் கவுண்டியில் ஆள்கள் மூலம் வாக்கு எண்ணும் பணி நடைபெற்று வருகின்றது. இதனை அடுத்து அல்கோருக்கும் ஜோர்ஜ் புஷ்ஷுக்கும் இடையிலான வாக்கு வித்தியாசம் 930 இலிருந்து 719 ஆகக் குறைந்துள்ளது என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன. எனினும் புஷ்ஷே தொடர்ந்து முன்னணியில் இருக்கின்றார்.

(ம)

# முன்னாள் ராணுவ ஆட்சியாளர் பங்களாதேஷில்சிறைத்தண்டனை

## உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

பங்களாதேஷ் முன்னாள் இராணுவ ஆட்சியாளர் எஸ். எம். எர்ஷாத்துக்கு டாக்கா உயர் நீதிமன்றம் விதித்த தண்டனையை பங்களாதேஷ் உச்ச நீதிமன்றம் உறுதிப்படுத்தி உள்ளது.

பலமாடிக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டதில் இராணுவ ஆட்சியாளர் ஊழல் புரிந்தார் என்று அவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. இது குறித்து விசாரணை செய்த டாக்கா உயர் நீதிமன்றம் எர்ஷாத்துக்கு 5 வருட சிறைத்தண்டனை விதித்தது. இதனை எதிர்த்து அவர் உச்ச நீதிமன்றில் மேன் முறையீடு செய்திருந்தார்.

அந்த மனுவை விசாரணை செய்த உச்ச நீதிமன்றம் எர்ஷாத்துக்கு எதிரான தண்டனையை உறுதி செய்துள்ளது.

எனினும் டாக்கா உயர் நீதிமன்றத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி ஐந்தரைக் கோடி 'டாகா' வை எர்ஷாத் அபராதமாகச் செலுத்தினால் அவர் சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டியதில்லை என்றும் —

அபராதம் கட்டத் தவறினால் 6 மாத சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் —

உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

(ம-8)

## பாகிஸ்தானில் புதிய கூட்டணி

இஸ்லாமாபாத், நவ. 25

பாகிஸ்தான் அரசியலில் எதிரெதிர் துருவங்களாக இயங்கிய முன்னாள் பிரதமர்களான நவாஸ் ஷெரீப்பும் பெனாசிர் பூட்டோவும் இராணுவ ஆட்சியை அகற்றுவதற்காக ஜனநாயகக் கூட்டணியை அமைத்து இணைந்து செயல்பட இணங்கியுள்ளனர்.

எதிர்வரும் 26 ஆம் திகதி இஸ்லாமாபாத்தில் நடைபெறவுள்ள முஸ்லிம் லீக் மற்றும் மக்கள் கட்சிக் கூட்டத்தில் புதிய கூட்டணிக்கான இறுதி வடிவம் தரப்படவுள்ளது

## ஜனாதிபதியின் விஜயம் ரத்து

புதுடில்லி, நவ. 25

இந்திய ஜனாதிபதி கே. ஆர். நாராயணனின் தமிழ்நாடு, கேரள மாநிலங்களுக்கான விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதிக்கு உடல் நலம் குன்றிய தனாலேயே இந்த விஜயம் ரத்துச் செய்யப்பட்டதாக ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ம-8)

## பழைய கார்கள் ஓடுவதற்குத் தடை

காத்மண்டு, நவ. 25

நேபாளத்தில் 20 ஆண்டு காலத்துக்கு முந்திய பழைய மோட்டார் வாகனங்களை நகர வீதிகளில் செலுத்துவதற்கு அடுத்த ஆண்டு முதல் தடை விதிக்கப்படவுள்ளது என்று நேபாள அரசு அறிவித்துள்ளது.

டீஸல் மூலம் இயங்கும் முச்சக்கர வண்டிகளுக்கு ஏற்கனவே நேபாளததில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

(ம-8)

# சிவசேனைத் தலைவரின் வீட்டை தகர்ப்பதற்குத்தீவிரவாதிகள் முயற்சி

புதுடில்லி, நவ. 25

சிவசேனைத் தலைவர் பால்தாக்கரேயின் இல்லத்தையும் இந்து அடிப்படைவாத அமைப்பான ஆர்.எஸ் எஸ். அமைப்பின் தலைமையகத்தினையும் குண்டு வைத்துத் தகர்க்கத் திட்டப்பட்டிருந்த சதித் திட்டம் ஒன்றை தாம் முறியடித்துள்ளதாக இந்தியப் பொலீஸார் அறிவித்துள்ளனர்.

உள்ளூர் தீவிரவாதிகளுடன் இணைந்து பாகிஸ்தான் தீவிரவாதிகள் இந்தச் சதித்திட்டத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து பொலீஸார் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின் போது இந்தச் சதி முயற்சியில் ஈடுபட்ட 4 தீவிரவாதிகளைக் கைது செய்ததுடன் ஆயுத தளபாடங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட தீவிரவாதிகளிடம் இருந்தே இந்தத் திட்டம் குறித்த தகவல் பெறப்பட்டதாகவும்—

இந்தச் சதித் திட்டத்துடன் தொடர்புடைய ஏனையவர்களைப் பொலீஸார் தேடிவருவதாகவும் — அதிகாரிகள் தெரிவித்தனர். (ம — 8)

## தாக்குதல்

கான்பரா, நவ. 25

இந்தோனேசியாவில் உள்ள ஆஸ்திரேலியத் தூதுவர் ஜோன் மெக்கார்த்தி ஜகார்த்தா ஆதரவு கிழக்குத் திமோர் குழுவினரால் தாக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை மேற்படி தாக்குதல் சம்பவத்தை ஆஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹோவல்ட் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

# சத்தியமங்கலம் காட்டுப் பகுதியில் வீரப்பனைப் பிடிக்கத் தேடுதல்!

## மத்திய அரசின் உதவியும் பெறப்படும்

சென்னை, நவ. 25

சந்தனமரக் கடத்தல் வீரப்பன் தங்கி இருப்பதாகக் கருதப்படும் சத்தியமங்கலம் காட்டுப் பகுதியில் வீரப்பனைத் தேடிப்பிடிக்கும் நடவடிக்கைகளைத் தமிழ்நாடு, கர்நாடகப் பொலீஸார் கூட்டாக ஆரம்பித்துள்ளனர்.

வீரப்பனைப் பிடிப்பதற்கு மத்திய அரசின் உதவி பெறுவது தொடர்பாக நேரில் கோரிக்கை விடுக்கத் தமிழ்நாடு அரசின் பிரதிநிதிகள் குழு ஒன்று புதுடில்லி சென்றுள்ளது. இக்குழு உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி, பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தி உள்ளது.

வீரப்பனைப் பிடிப்பதற்குத் தேவையான மனித பலத்தையும் ஆயுத உதவிகளையும் தருவதாக எல். கே. அத்வானி உறுதியளித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் இந்த விடயத்தில் மத்திய அரசின் உதவியைக் கோருவதற்காகக் கர்நாடக முதல்வர் எஸ். எம். கிருஷ்ணா நாளை ஞாயிற்றுக்கிழமை புதுடில்லி செல்லவுள்ளார்.

[ம-8]

# இறுதி அறிவித்தல்

## யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான கடைகளின் குத்தகை உரிமையை புதுப்பித்தல்

யாழ்ப்பாண மாநகர சபைக்குச் சொந்தமான கடைகளின் வாடகை உரிமையாளர்கள் தத்தமது கடைகளின் குத்தகை உரிமையை 28- 02- 2001 ஆம் திகதிக்கு முன்பாக புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

28-02-2001 ஆம் திகதிக்கு முன்னர் குத்தகை உரிமையைப் புதுப்பித்துக் கொள்ளாத கடைகள் மீளக் கேள்வி கோர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்பதையும் அறியத்தருகின்றேன்.

மேலும் இக்கடைகள் தொடர்பாக ஏதாவது பிணக்குகள் இருப்பின் 28- 02- 2001 ஆம் திகதிக்கு முன்பு எமக்கு எழுத்து மூலம் அறியத் தருமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

இராசா தணிகாசலம்,
மாநகர பதில் ஆணையாளர்.

மாநகர சபை,
யாழ்ப்பாணம்.
24-11-2000

(சி/13973)

# கண்ணீர் அஞ்சலி

எமது செயலகத்தில் கடமையாற்றும்

**திருமதி ஆனந்தவல்லி சிவதட்சணாமூர்த்தி**

அவர்களின் அன்புத் தந்தையார்

## ஆறுமுகம் சுப்பையா

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மசாந்திக்கும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
வலிகாமம் மேற்கு, சங்கானை.

(சி/13974)

# தாக்குதலை நிறுத்தினால்தான் இஸ்ரேலுடன் பேச்சு!

## பலஸ்தீனம் அறிவிப்பு

ஜெருசலேம், நவ. 25

பலஸ்தீனம் மீதான முற்றுகையையும் அப்பாவிப்பலஸ்தீனியர் மீதான தாக்குதல்களையும் இஸ்ரேல் நிறுத்தினாலேயே அதனுடன் பேச்சு நடத்த முடியும் என்று பலஸ்தீனம் அறிவித்துள்ளது.

இதேவேளை—

மத்திய கிழக்கின் தற்போதைய நிலை குறித்து பேச்சு நடத்தவென பலஸ்தீன தலைவர் யசீர் அரபாத் ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவுக்குச் சென்றுள்ளார்.

இதற்கிடையில்—

மேற்குக் கரை மற்றும் காஸா பகுதிகளில் வன்முறைகள் தொடர்ந்தவண்ணம் உள்ளன.

தென் காஸா பகுதியில் உள்ள மாவட்ட இணைப்பு அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களில் மூன்று இஸ்ரேலியர்களும் இரண்டு பலஸ்தீனர்களும் உயிரிழந்துள்ளனர்.

இறந்த பலஸ்தீனர்கள் இருவரும் அப்பாவி அதிகாரிகள் என்றும் இஸ்ரேல் இராணுவமே இத்தாக்குதலுக்குப் பொறுப்பு என்றும் பலஸ்தீன அதிகாரிகள் குற்றஞ் சாட்டி உள்ளனர். இதற்கு பதிலளிக்கும் விதத்தில் பேசிய இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் பலஸ்தீனர்களே வெளியில் இருந்து மோட்டார் குண்டுகளால்கட்டடத்தைநோக்கிச் சுட்டதாகக் கூறினார்.

(ம-8)

# நெடுந்தீவுப் பயணிகளின் சிரமங்கள் தீர்வதெப்போது?

மக்கள் அரங்கம்

குறிகாட்டுவானுக்கும் — நெடுந்தீவுக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் குமுதினிப் படகுச் சேவையை அதிகரிக்குமாறு பொதுமக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் யாழ்ப்பாணம் சென்றுவரும் நெடுந்தீவு வாசிகள் மற்றும் கடமை நிமித்தம் நெடுந்தீவுக்குச் செல்லும் அரச உத்தியோகத்தர்கள், நெடுந்தீவில் இருக்கும் உறவினர்களின் வீடுகளுக்குச் செல்லும் உறவுகள் சார்பில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குமுதினிப்படகு தற்போது தினமும் ஒரு சேவையை மட்டுமே நடத்துகிறது. அதாவது முற்பகல் 10-30 மணிக்கு குறிகாட்டுவானில் இருந்து புறப்படும் இந்தப்படகு முற்பகல் 11-30 மணிக்கு நெடுந்தீவைச் சென்றடைகிறது. பின்னர் அங்கிருந்து பிற்பகல் 1-30 மணிக்குத் தனது சேவையை ஆரம்பித்து பிற்பகல் 2-30 மணிக்கு குறிகாட்டுவானை வந்து அடைந்ததும் தனது சேவையை நிறுத்திக் கொள்கிறது.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் தினமும் மூன்று சேவையை நடத்திய இந்தப்படகு தற்போது ஒரு

## 'குமுதினிச்' சேவையை அதிகரிக்க வேண்டும்

சேவையுடன் தனது பணியை நிறுத்திக் கொண்டதை அடுத்தே பொதுமக்கள் மத்தியில் இந்தப்படகுச் சேவையை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

இந்தப் படகு சேவையை அதிகரிக்குமாறு பல்வேறு தரப்பினரிடமும் பலமுறை வேண்டுகோள் விடுத்தும் அது நிறைவேறாத நிலையிலேயே தற்போது பத்திரிகை மூலமாக இந்தக் கோரிக்கை விடுக்கப்படுகிறது.

தற்போது பருவமழை ஆரம்பித்து விட்டது. இதனால் காலையில் நெடுந்தீவில் இருந்து யாழ்ப்பாணம் மற்றும் குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்குச் செல்ல விரும்பும் பொது மக்களும், வியாபாரிகளும் தனியார் படகுகள் மூலமே தமது பயணத்தை ஆரம்பிக்கின்றனர். இந்தப் படகுகள் கூடாரம் எதுவுமில்லாத திறந்த படகுகள் ஆகும். அத்துடன் மிகவும் குறைவான பயணிகளே இந்தப் படகுகளில் பயணம் செய்ய முடியும்.

### மழையில் நனையும் பயணிகள்

அதிகாலை வேளையிலே பெரும்மழை பெய்யத் தொடங்கி விட்டால் குறிப்பிட்ட நேரத்தில் அதாவது 7 மணிக்கு இந்தத் தனியார் படகுகள் சேவையை ஆரம்பிக்க முடியாது. மழை குறைந்ததும் படகுகள் தமது சேவையை ஆரம்பித்துவிடும்.

எனினும் நடுக்கடலில் மழை பெய்யத் தொடங்கி விட்டால் பயணிகள் அனைவரும் நனைந்தவாறே — நடுங்கியவாறே தமது பயணத்தைத் தொடரவேண்டிய துர்ப்பாக்கிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.

கைக்குழந்தைகள் வயோதிபர்கள் மற்றும் நோயாளிகள் எனப் பல தரப்பினரும் இத்தகைய அவலநிலைக்கு உள்ளாகின்றனர் இந்து சமுத்திரம் என்னும் பெருங்கடலில் இத்தகைய ஆபத்தான சூழ்நிலையில் பயணிகள் பலரும் கஷ்டங்களை அனுபவிப்பது பல்வேறு தரப்பினருக்கும் தெரியும். எனினும் எல்லோருமே இதுவரை தமது தார்மீகக் கடமையைச் செய்யத்தவறிவிட்டனர் போலும்.

பலத்த காற்றின் மத்தியிலும் கடற் கொந்தளிப்பின் மத்தியிலும் தமது உயிரையும் துச்சமென மதித்து சேவையையே தமது குறிக்கோளாகக் கொண்ட படகோட்டிகளினதும் படகு உரிமையாளர்களினதும் நல்லெண்ணமே நெடுந்தீவு மக்களின் போக்குவரத்து ஒழுங்காக இடம் பெறக் காரணமாகும்.

இவ்வாறு படகுச் சேவைகள் தாமதமாவதனால் குறிகாட்டுவானுக்கும் — யாழ்ப்பாணத்துக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் இ.போ.ச. பஸ்கள் நெடுந்தீவுப் பயணிகளை ஏற்றாமலேயே யாழ்ப்பாணம் சென்று விடுகின்றன. இதனால் பல சந்தர்ப்பங்களில் நெடுந்தீவுப் பயணிகள் ஒருநாள் இரவை நயினாதீவில் கழிக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டு விடுகிறது. மறுநாளே இவர்கள் யாழ்ப்பாணத்துக்கான பயணத்தைத் தொடர்கின்றனர்.

### குமுதினிப் படகின் வசதிகள்

ஒரே தடவையில் பெரும் எண்ணிக்கையானோர் பயணம் செய்யக்கூடிய வசதி குமுதினிப்படகில் உண்டு. அத்துடன் இதில் கூடார வசதி உண்டு. இதனால் பயணிகள் மழை காலங்களிலும், வெயிற் காலங்களிலும் எந்தவிதமான கஷ்டங்களும் இல்லாமல் பயணம் செய்யக்கூடியதாகவுள்ளது. அதுமட்டுமன்றி நெடுந்தீவுப் பெருங்கடலில் புயலையும் கடற் கொந்தளிப்பையும் சமாளித்துப்பயணம் செய்யக்கூடிய சக்தியும் இதற்கு உண்டு.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான இந்தப் படகு கடந்த ஒன்பது மாதகாலமாக திருத்தவேலைகளுக்காக ஊர்காவற்றுறை துறைமுகத்தில் தரித்துவிடப்பட்டிருந்தது. பின்னர் பல இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் தற்போது சேவையைத் தொடங்கியுள்ளது

எனினும் முழுமையாகத் திருத்தவேலை முடிவடையாததால் குறிப்பாக படகின் ஜன்னல்களுக்கு கண்ணாடி பொருத்தப்படாததால் தற்போது பெய்யும் மழை காரணமாக மழைநீர் முழுவதும் படகினுள் வந்து விழுகிறது. இதனால் பலரும் நனைந்தவாறே பயணத்தைத் தொடர்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் படகில் உள்ள திருத்த வேலைகளை உடனடியாக மேற்கொண்டு தினமும் மூன்று அல்லது இரண்டு தடவைகள் படகுசேவை இடம்பெற தம்மாலான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் நெடுந்தீவுப் பயணிகளின் போக்குவரத்தில் உள்ள நெருக்கடிகளை ஓரளவு நீக்கக் கூடியதாகவிருக்கும்.

★

— பயணி

# 1,027 குடும்பங்களுக்கு இதுவரை கோப்பாயில் இடம்பெயர் கொடுப்பனவு

வலி. கிழக்கு, நவ. 25

அண்மையில் இடம்பெற்ற அனர்த்தங்களால் தென்மராட்சி, யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து இடம்பெயர்ந்து கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருந்தவர்களுக்கும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்குமான 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு ஆயிரத்து 27 பயனாளிகளுக்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமையும், புதன்கிழமையும் கோப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது. கோப்பாய் பிரதேச செயலர் பிரிவை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட இருபாலை கிழக்கு, கோப்பாய் தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கான கொடுப்பனவு 29 ஆம் திகதி புதன்கிழமையும் —

ஏனைய கிராம அலுவலர் பிரிவுகளுக்கு 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதே வேளை —

ஏற்கனவே கொடுப்பனவு வழங்கப்பட்ட போது அதைப் பெறாதவர்களுக்கு 30 ஆம் திகதி வியாழக்கிழமை கொடுப்பனவை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொடுப்பனவு வழங்கப்படவுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் குடும்பங்களின் எண்ணிக்கையும் வருமாறு:

இருபாலை தெற்கு—2, இருபாலை கிழக்கு — 226, கல்வியங்காடு — 13, கோப்பாய்தெற்கு — 325, கோப்பாய் மத்தி — 10, கோப்பாய் வடக்கு — 4, உரும்பிராய் மேற்கு — 59, உரும்பிராய் வடக்கு — 23, உரும்பிராய் தெற்கு — 29, உரும்பிராய் கிழக்கு — 12, ஊரெழு — 7, நீர்வேலி தெற்கு — 17, நீர்வேலி வடக்கு 11, நீர்வேலிமேற்கு — 2, நீர்வேலி கிழக்கு — 18, சிறுப்பிட்டி கிழககு—18, சிறுப்பிட்டி மேற்கு — 8, புத்தூர்வடக்கு — 28, புத்தூர்கிழக்கு — 18, நவக்கிரி — 10, ஆவரங்கால் கிழக்கு —28, ஆவரங்கால் மேற்கு — 63, புத்தூர்மேற்கு — 13, அச்செழு — 5, வாதரவத்தை — 1, பத்தமேனி — 10, தம்பாலை,கதிரிப்பாய் — 4, இடைக்காடு — 1, அச்சுவேலி வடக்கு — 20, அச்சுவேலி தெற்கு — 41, அச்சுவேலி மேற்கு — 8 ஆகிய 31 கிராம சேவையாளர்கள் பிரிவுகளில் உள்ள பயனாளிகளுக்கே கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இக் கொடுப்பனவுகளைப் பெறும் பயனாளிகள் தாம் வசிக்கும் பிரிவு கிராம அலுவலருடன் தொடர்புகொண்டு பெயர்ப் பட்டியலில் பெயர் உள்ளதா என்பதனை உறுதிப் படுத்திய கடிதத்துடனும் அடையாள அட்டையுடனும் அன்றையதினம் பிதேச செயலகத்திற்கு சமுகமளித்து கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் கோப்பாய் பிரதேச செயலர் கே. ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஜ-180)

## வலி. தென்மேற்கில் 3 ஆலயங்களைப் புனரமைக்க 5 லட்சம் ரூபா நிதி உதவி

வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கடந்த கால வன்செயல்களால் மோசமான பாதிப்புக்குள்ளான மூன்று ஆலயங்களுக்கு வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை 5 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாக மானிப்பாய் ஈ.பி.டி.பி. தொகுதி அமைப்பாளர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் தெரிவித்தார்.

★ நவாலி - களையோடை அம்மன் ஆலயம் (ஒரு லட்சம் ரூபா)

★ வடலியடைப்பு - சித்தி விநாயகர் ஆலயம் (ஒரு லட்சம் ரூபா)

★ பெரியவிளான் - அந்தோனியார் ஆலயம் (3 லட்சம் ரூபா) ஆகிய ஆலயங்களுக்கே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ஆலயங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு புனரமைப்புப் பணிகள் விரைவில் நடைபெறவுள்ளதாக அமைப்பாளர் மேலும் தெரிவித்தார். (ம-185)

## பன்ன வேலை பயிற்சி நிலையம்

நெடுந்தீவு, நவ. 25

நெடுந்தீவில் எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை பன்னவேலைப் பயிற்சி நிலையம் ஆரம்பித்து வைக்கப்படும்.

பனை அபிவிருத்திச் சபையின் ஆதரவுடன் தேசிய இளைஞர் சேவை மன்றம் மேற்படி நிலையத்தை ஆரம்பிக்கவுள்ளது. (ஜ-111)

## இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு யுனிசெவ் 'லாம்பு' அன்பளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 25

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தினால் இடம்பெயர்ந்தவர்களுக்கு என அமைக்கப்பட்டு வரும் குடிசைகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு ஹரிக்கேன் லாம்பு வீதம் "யுனிசெவ்" நிறுவனம் வழங்கி வருகிறது.

சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் அமைக்கப்பட்ட ஆயிரத்து 153 குடிசைகளுக்கே இவ்வாறு லாம்புகள் விநியோகிக்கப்படுகின்றன.

ஜேர்மனியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சில்வர் ரக லாம்புகளே இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இதே வேளை —

"கெயர்" நிறுவனத்தால் அமைக்கப்படும் குடிசைகளுக்கும் இந்த லாம்புகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-5)

## இலவச பாட நூல்கள் விரைவில் கப்பலில் வரும்

யாழ்ப்பாணம், நவ. 25

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு 2001 ஆம் கல்வி ஆண்டில் விநியோகிக்கத் தேவையான பாட நூல்கள் கப்பலில் எடுத்து வரப்படவுள்ளன.

குடாநாட்டிற்கு வரவுள்ள அடுத்த கப்பலில் இந்தப் பாடநூல்கள் எடுத்து வரப்படவுள்ளதாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்தப் புத்தகங்கள் எடுத்து வரப்பட்டவுடன் அவற்றைப் பாடசாலைகளுக்கு விநியோகிப்பதற்கான ஒழுங்குகளைத் தாம் மேற்கொண்டுள்ளதாகவும்—

இதனால் தாமதமின்றி நூல்கள் அனைத்தும் விநியோகிக்கப்பட்டுவிடும் எனவும்—

அவர் தெரிவித்தார்.

இதேவேளை—

அடுத்த ஆண்டிற்குரிய 10 ஆம் தர மாணவர்களுக்கான புத்தகங்கள் ஏற்கனவே எடுத்து வரப்பட்டிருந்த போதும் ஆங்கில பாடத்துக்கான புத்தகங்கள் பற்றாக்குறையாகக் காணப்பட்டதாகவும்—

வரவுள்ள கப்பலில் 10 ஆம் தர மாணவர்களுக்குத் தேவையான புத்தகங்களும் எடுத்து வரப்படவுள்ளதாகவும்—

தெரிவிக்கப்பட்டது.

(ம-6-5)

## கணனிச் செயற்பாட்டறை திறப்பு

நெடுந்தீவு, நவ. 25

நெடுந்தீவு பிரதேச சபையின் அண்மையில் கணனி செயற்பாட்டறை திறந்து வைக்கப்பட்டது.

பிரதேச சபைத் தலைவர் அ. வெ. அரியநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் உதவி உள்ளுராட்சி ஆணையாளர் ரீ. வி. கிருஷ்ணசாமி செயற்பாட்டறையைத் திறந்து வைத்தார்.

(ஜ-111)

## 31 ஆம் நாள் நினைவு இரங்கல்

எமது சங்க உறுப்பினர்களாகிய
வைத்திய கலாநிதி க. சிவராசாவின்
அன்புத் தந்தையும்
வைத்திய கலாநிதி சைலஜா சிவராசாவின்
பாசமிகு மாமனாருமாகிய

அமரர்

### கந்தர் கணபதிப்பிள்ளை

அவர்களின் மறைவையிட்டு துயருறும் குடும்பத்தினர், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.

Bsms பட்டதாரிகள் சங்கம்,
கைதடி.

[80855]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 05 — 11 — 1947

மறைவு: 25 — 11 — 1999

### திருமதி பமிலா சத்தியவதி சிவஞானம்

(முன்னாள் ஆசிரியை - யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை)

ஆண்டவரின் நித்திய இளைப்பாறுதலில்
அமர்ந்திருக்கும் உங்களை
அன்புடன் இந்நாளில் நினைவு கூரும்.

தாய்: திருமதி த. அருட்பிரகாசம்
மகன்: செல்வன் சி. மதிவாணன்
தம்பி: திரு. றோய் ரஞ்சன்
மற்றும் உற்றார், உறவினர்கள்.

தற்காலிக முகவரி
25, ஆக் லேன்,
உடுவில். (80814)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 21 — 08 — 1956

மறைவு: 26 — 10 — 2000

செல்வி

### கனகசபை மனோராணி

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஊழியர்]

ஒரு மாத்துப் பறவைகளாய்
ஒற்றுமையாய் உறவாடி
ஒருபொழுதும் பிரியாத
ஒன்றித்த நேசமுடன்
ஒற்றுமையாய் வாழ்ந்த — எம்
உறவினிலே உன் பிரிவு
உள்ளத்தை உருக்கி
உருக்குலைய வைத்ததுவே!
உருவம் குலைந்து
ஊரை விட்டுப் பிரிந்து
ஊரையெல்லாம் காக்கும்
உத்தமர் பதம் சேர்ந்தனையோ!
உன்னை எண்ணி நித்தமும்
உன் பிரிவால் தவிக்கின்றோம்.
உந்தன் ஆத்ம சாந்திக்காக
உளமார பரமை வேண்டியே நிற்கின்றோம்!

தகவல்:
தாய், சகோதரர்கள்.

விஸ்வகுல வீதி,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை. [80817]

## ஆசிரியர் சம்பளக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், நவ. 25

கச்சாய் அ. த. க. பாடசாலை ஆசிரியர்கள் தங்களுக்குரிய நவம்பர் மாதக்கொடுப்பனவை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி மகா வித்தியாலயத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது

தவறியவர்கள் நாளை மறுதினம் பிற்பகல் ஒரு மணிக்கு மருதனார்மடம் வலயக் கல்விப் பணிமனையில் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளலாம் என்று பாடசாலை அதிபர் கே. மங்களநேசன் அறிவித்துள்ளார் (ஐ — 8)

## பரீட்சை நேர சூசி

யாழ்ப்பாணம், நவ. 25

யாழ் உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் எதிர்வரும் டிசெம்பர்மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமாகும் ஆண்டிறுதிப் பரீட்சைக்கான நேர சூசி மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தமது நேர சூசிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் மேற்படி பரீட்சைகள் 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் திகதி வரை நடைபெறும் எனவும் உயர் தொழில் நுட்ப நிறுவன இயக்குநர் தெரிவித்தார்.

(ம — 6)

## ஆசிரியருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், நவ. 25

சாவகச்சேரி சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தின் ஆசிரியர்கள், ஊழியர்கள் அனைவரையும் 1999 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தாம் பெற்ற லீவு விவரங்களுடன் எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் சமுகமளிக்குமாறு பாடசாலை அதிபர் மூ. பாலசுப்பிரமணியம் கேட்டுள்ளார்.

(ஐ-8)

## நியமனம்

வலி. கிழக்கு, நவ. 25

கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு மத்திய அரசினால் 4 எழுதுவினைஞர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

துரைராசா மோகனராஜ், செல்வி இரவிந்திராஜ் தர்சினி, கந்தசாமி பிரபாகரமூர்த்தி, நாகமுத்து சிவச்செல்வன் ஆகிய நால்வருமே கடந்த 1-11 2000 திகதி முதல் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

(ஐ-180)

## பாடசாலை நாள்கள் குறித்து அறிவிப்பு

வடமராட்சி, நவ 25

வடமராட்சி கல்வி வலயப் பிரதேசத்தில்நாடாளுமன்றத் தேர்தலுக்காக கடந்த மாதம் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் மூடப்பட்டிருந்த பாடசாலைகளை இரண்டு சனிக்கிழமைகளில் நடத்தி பாடசாலை நாள்களை ஈடுசெய்யும்படி வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அதிபர்களைக் கோரியுள்ளார்.

இவ்வாறு மூடப்பட்டிருந்த பாடசாலைகளை அடுத்த மாதம் 2 ஆம், 9 ஆம் திகதிகளில் வரும் சனிக்கிழமைகளில் பாடசாலைகளை நடத்தும்படி கோரப்பட்டுள்ளது

தேர்தல் தினத்தன்றும், அதற்கு முதல் நாளும் மாணவர்களின் வரவு 40 வீதத்திற்கு குறைவாக இருந்திருப்பினும் மேற் குறிப்பிட்ட இரு நாள்களில் பாடசாலைகளை நடத்தும்படி வடமராட்சி வலயக்கல்விப்பணிப் பாளர் திரு. சி. சிவராசா பணித்துள்ளார். (ஐ-173)

## பின் முற்றாகும் தீர்வை

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

இன்பராஜ் பெண் தேவகி
(செல்லத்துரை மகள் தேவகி)
காட்டுப்புலம்,
அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

வழக்காளி:

**வழ. இல: மணநீக்கம் / 106,**

எதிர்: செல்லையா இன்பராஜ்
கலைநகர், அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

எதிராளி

இவ்வழக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நீதிபதி திரு. பா. சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையில் வழக்காளியும் அவர்சார்பில் அவரின் சட்டத்தரணி திரு பொ. சுந்தரலிங்கமும் சமுகமாயிருக்க, வழக்காளியால் அளிக்கப்பட்ட சாட்சியத்தையும் கோப்பிடப்பட்டிருந்து வ-1 என்ற ஆவணத்தையும் ஏற்றுக்கொண்டு வழக்காளியை எதிராளி வன்முறையாகக் கைவிட்டுச் சென்றுள்ளார் எனத் திருப்திப்பட்டு எதிராளி வன்முறைக் கைவிடல் என்னும் திருமணம்சார் தவறொன்றைப் புரிந்துள்ளார் எனக் கண்டு அதனடிப்படையில் வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி நிகழ்ந்த திருமணத்தை இத்தால் இரத்துச் செய்து வெற்றும் வெறிதும் ஆக்கிக்கட்டளையிட்டு இப் பின் முற்றாகும் தீர்வு வழங்கப்படுகின்றது.

இப் பின் முற்றாகும் தீர்வை பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு, பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) மாத காலத்தினுள் ஆட்சேபனை எதுவும் மன்றிற்குச் சமர்ப்பிக்காவிடில், இப் பின் முற்றாகும் தீர்வை முற்றான தீர்வை ஆக்கப்படும்.

**2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம்
14 ஆம் திகதி**

வரைபு: பொ. சுந்தரலிங்கம்
வழக்காளியின் சட்டத்தரணி

ஒப்பம்: பா சுப்பிரமணியம்
மாவட்ட நீதிபதி, மல்லாகம்.

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம்: மணநீக்கம்/106இன் பின் முற்றாகும்தீர்வையின் அத்தாட்சிப் படுத்திய பிரதி என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

செ. விக்னேஸ்வரமூர்த்தி
பதிவாளர்
மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

மண நீக்கம்: 106,
பின் முற்றாகும் தீர்வை. (கி-13970)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சண்முகம் செல்லம்மா

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் செல்லம்மா நேற்று (24 - 11 - 2000) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மூத்ததம்பி சண்முகம் அவர்களின் அன்பு மனைவியும், வரதலிங்கம் (லெபனான்), அற்புதமலர், புஸ்பமலர், சறோஜினிதேவி, மோகன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத்தாயாரும் சந்திராதேவி, சிவகுருநாதன், பரஞ்சோதிநாதன், காலஞ்சென்ற செல்வநாதன், மஞ்சுளாதேவி ஆகியோரின் மாமியும் துவாரகன் அஜித்தா, சுட்டா, கஸ்தூரி, இராகுலன், நிசாந்த், நர்மதா, சிந்துஜா, நிஷானி, பார்கவி, சுஜன் ஆகியோரின் பேர்த்தியும் நாகம்மா காலஞ்சென்ற பூபாலசிங்கம், இராசம்மா, மகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-11-2000) சனிக்கிழமை 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சங்கானை கரச்சி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
வல்லை வீதி,
சங்கானை. (80850.

தகவல்:
மூ. சண்முகம்
(கணவர்)

### நடராசா மனோன்மணி

வடலியடைப்பைச் சேர்ந்த நடராசா மனோன்மணி 23—11—2000 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற A. S. நடராசாவின் [இளைப்பாறிய P. W. D. ஓவசியர்] அன்பு மனைவியும், நாகராணி, யோகராணி, விமலராணி, விக்னராஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும், தியாகராசா [இளைப்பாறிய தொழில் ஆணையாளர்], செல்வராசா [லிப்டன்], Dr. சிறீறஞ்சன் [தெகிவளை], மதிவாணி [வட்டு இந்துக் கல்லூரி முன்னாள் ஆசிரியை] ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று[25-11-2000] சனிக்கிழமை காலை 9 00 மணிக்குக் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள்யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
N. விக்னராஜா
(மகன்).

11/1A, கௌடான வீதி,
தெகிவளை.
T. P. No. 01 - 716074 (80861)

உதயன்

## இயற்கை அனர்த்த முற்பாதுகாப்பு

கிழக்கு மாகாணத்தில் — குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில்— கடந்த வாரம் பெய்த பெருமழை பெரும் அனர்த்தங்களை விளைவித்தது. மக்களின் இயல்புவாழ்க்கை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இன்னமும் சகஜ நிலை ஏற்படவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உண்டான வெள்ளப்பெருக்கு சுமார் ஒரு லட்சம் மக்களை அவர்களின் வீடுகளில் இருந்து இடம்பெயர வைத்துள்ளது. பல்லாயிரக்கணக்கான ஹெக்டயர் நிலத்தில் விவசாயம் அழிந்துள்ளது.

1978 ஆம் ஆண்டில் — 22 வருடங்களுக்கு முன்னர் — ஏற்பட்ட சூறாவளி அனர்த்தம் மட்டக்களபபு மக்களின் வாழ்க்கையில் மிகப் பெரிய தாக்கத்தையும் பாதிப்பையும் உண்டாக்கியது.

அந்தவேளையில் போர் அனர்த்தங்கள் எதுவும் அங்கு இல்லை. அவ்வாறிருந்தும் மட்டக்களப்பு மக்களின் வாழ்க்கை முந்திய நிலைக்குத் திரும்புவதற்கும், பாதிப்புக்களில் இருந்து மீள்வதற்கும் பல வருடங்கள் எடுத்தன. இப்போது போர் அனர்த்தங்களால் மக்களின் வாழ்க்கை சீரழிந்துள்ளது. வடக்கு மக்களைப் போலவே கிழக்கு மக்களும் இடம்பெயர்வுகள், உயிரிழப்புகள், பொருளாதார நலிவுகள் என்பவற்றை அனுபவித்து இன்னலுறுபவர்கள்;

பட்டகாலிலே படும் கெட்ட குடியேகெடும் என்பதற்கொப்ப, இயற்கை அனர்த்தமான வெள்ளப் பெருக்கும் அவர்களை மேலதிகமாகத் தாக்கியுள்ளது. சட்டியில் இருந்து நெருப்புக்குள் விழுந்த நிலையில் அவர்கள் இப்போது படும் துன்பங்கள் சொல்லும் வகையன்று.

போரை நிறுத்தி அதன் அனர்த்தங்களைத் தடுக்க அரசு அக்கறை கொள்வதாக இல்லை. ஆறு வருடங்கள் கழிந்தும் தீர்வு முயற்சிகள் பூச்சியத்தையே சுற்றி வருகின்றன. இத்தகைய ஒரு பின்னணியில் இயற்கை அனர்த்தங்களின் தாக்குதல்களால் மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதிலாவது அரசு அக்கறை கொண்டிருக்க வேண்டும்.

ஆனால் அதிலும் அரசும் அரச அதிகாரிகளும் மக்கள் நலனை முன்வைத்துச் செயற்பட்டதாக இல்லை. இயற்கை அனர்த்தப் பாதிப்புகளைக் குறைக்கக் கூடியதாகத் திட்டமிட்ட வகையில் முன்னேற்பாட்டு நடவடிக்கை எதுவும் செய்யப்படவில்லை.

அதில் போதிய கவனம் செலுத்தப்பட்டதற்கான பிரதிபலிப்பு எதுவுமில்லை.

யாழ்ப்பாண மாவட்டத்திலும் இயற்கை அனர்த்தத்தை எதிர்பார்த்து மக்கள் நலனை முன்வைத்து செயற்பாட்டுத் திட்டங்கள் எதுவும் கைவசம் இருப்பதாக அறியப்படவில்லை

வெள்ளம் மற்றும் ஏனைய அனர்த்தங்களினால் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படாமல் முற்பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடமாகாணத்து அரசாங்க அதிபர்களை இப்போது தான் பணித்திருக்கிறார்.

இந்த நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டியவை. ஒருபோதுமே செய்யாதிருப்பதை விட இப்போதாவது (பிந்தியாவது) செய்யப்படுவது, செயற்படுவது பரவாயில்லை. குடாநாட்டு மக்களும் போரினால் பெரிதும் நொய்ந்து போய் இருப்பவர்கள். இயற்கை அனர்த்தப் பாதிப்புகளின் தாக்கத்தைக் குறைக்கவல்ல கூட்டங்கள், திட்டங்கள் மட்டுமன்றி நிறைவான செயற்பாடும் தேவை.

---

யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி விவகாரம்

# மக்களின் நன்மையை - நலனைக் கருத்திற்கொண்டு பிணக்கை நீக்குக

கடந்த சில நாள்களாக யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பற்றி உதயனில் வந்த செய்தியும் கருத்துப் பரிமாறலும் மனத்திற்கு மிகவும் வேதனை தருகின்றன.

சுமார் 35 வருடங்களுக்கு முன் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரியாக இரண்டு வருடங்கள் பணிபுரிந்தவன் என்ற முறையிலும் கடந்த 20 வருடங்கள் யாழ். நகர எல்லைக்குள் தொடர்ந்து வாழும் ஒரு பிரஜை என்ற முறையிலும் மருத்துவக் கல்லூரியில் சமூக மருத்துவம் கற்பிக்கும் ஓர் ஆசிரியர் என்ற முறையிலும் சில விடயங்களை எழுதுகிறேன்.

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். தெய்வேந்திரன் பேராதனை மருத்துவ பீடம் 1972 ஆம் வருடம் நடத்திய M.Med.Sc. என்ற உயர் பட்டப்படிப்பு வகுப்பில் மிகச் சிறந்த மாணவர் இருவரில் ஒருவராகத் திகழ்ந்தவர். மற்றவர் பின்பு இலங்கையின் சுகாதாரப் பணிப்பாளர் நாயகமாக பதவி வகித்தார். மற்ற ஏனையோரும் இந்த நாட்டிலும் பிறநாடுகளிலும் உயர் பதவிகளில் இருந்தனர். ஆனால் டாக்டர் தெய்வேந்திரன் பதவிகளை நாடாது எமது பிரதேச சேவைக்காக தனது வாழ்வின் பெரும் பகுதியை அர்ப்பணித்தவர்.

அவர் விரும்பியிருந்தால் உலகில் எங்கும் தொழில் பார்த்திருக்கலாம். அவருடைய படிப்பு, அனுபவம், ஆற்றல் மட்டுமல்ல அவருடைய டாக்டர் மனைவியின் மிகவும் வேண்டப்படும் நிபுணத்துவமான மயக்க மருந்தியல் எங்கும் இருவருக்கும் தொழில் வாய்ப்பு அளித்திருக்கும். ஆனால் இருவரும் நமது மக்களின் துன்பங்களையும் கவலைகளையும் பகிர்ந்து கொள்ளவும், அவற்றைப் போக்கவும் தீர்மானித்தனர்.

யாழ். நகரிலே அவர் மிகவும் அமைதியாக, விளம்பரம் ஏதும் இல்லாமல் ஆற்றிய சேவை மகத்தானது. யாழ். மக்களின் சுக நலனே அவர் வாழ்வின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. சகல சுகாதார நடவடிக்கைகளிலும் அவர் தானாகப் பங்கு பற்றினார் மிகவும் இக்கட்டான போர்ச் சூழலில் கூட அவர் தாய் — சேய் நிலைய பராமரிப்பை ரத்துச் செய்தது இல்லை. அவரது இந்த தாய்-சேய் சுக கரிசனையினால் தான், போரின் அழுத்தத்தின் மத்தியிலும் பல தாய்-சேய் உயிர்கள் காப்பாற்றப் பட்டன என்பது எனது திடமான நம்பிக்கை.

மருத்துவ பீடத்தின் சமூக மருத்துவப் பரீட்சைகளில் அவரை ஒரு பரீட்சகராகப் பங்குபற்றுவதற்கு நாம் பல முறை அழைத்திருந்தும் அவர் 'கிளினிக்' உண்டு, அதை விட்டுவிட்டு வரமுடியாது என்று எமது அழைப்பை ஏற்கவில்லை. இது அவரது பலவீனம் என்பது எனது கருத்து. தற்போது நகர

## நகரின் மூத்த பிரஜை ஒருவரின் வேண்டுகோள்

பிதாக்களுடன் ஏற்பட்ட கருத்து மோதல் இந்தப் பலவீனத்தால் ஏற்பட்ட ஒன்று தான். திட்டமிட்டுச் செயற்பட்டது அல்ல.

ஒரு மாநகர சபையின் உயர் பதவிகளில் ஒன்றான சுகாதார வைத்திய அதிகாரிப் பதவியை வகிக்கும் ஒருவர், தனது அறிவுக்கு ஏற்ப ஆலோசனைகளை மாநகர சபை முதல்வருக்கும், ஏனைய நகர பிதாக்களுக்கும் வழங்க வேண்டும். ஏனெனில் சட்ட திட்டங்கள் வகுப்பதற்கு அதிகாரம் உள்ளவர்கள் அவர்களே. அதற்காகவே சுகாதாரக் குழுக் கூட்டம் போன்ற கூட்டங்களை வைக்கிறார்கள். அந்தக் கூட்டங்களிலே தான் மாநகரசபையின் அங்கத்தவர்களுக்கு சுகாதார நிலைமையை எடுத்துக் கூறவும், பரிகாரத்திற்கு ஆலோசனை தரவும் முடியும். 'நோயாளர்களையும் மற்றும் சிகிச்சை நிலைய சேவைகளையும் புறக்கணித்துவிட்டு மாநகரசபைக் கூட்டங்களில் பங்குபற்றி தேநீர் அருந்திக் கதைகளைக் கேட்பது ஒரு வைத்திய அதிகாரியின கடமை அல்ல' என்று டாக்டர் தெய்வேந்திரன் கூறியது (உதயன், 21-11-2000) தவறான கூற்றாகும்.

### ஏற்றதல்ல

ஒரு சுகாதார வைத்தியர் சுகாதார நிலையத்தில் புரியும் வேலை, Intensive Care Unit இலோ வார்ட்டிலோ செய்யும் தீவிர சிகிச்சை போன்றது அல்ல. அது அமைதியான திட்டமிட்ட சுகாதாரக் கண்காணிப்பு மருத்துவரின் கண்காணிப்பில் அவற்றை ஒரு மருத்துவமாது செய்யலாம். அதற்காக சுகாதார நிர்வாகத்தில், முக்கிய அம்சமான குழுக்கலந்துரையாடல்களில் ஒருசில மணி நேரம் பங்குபற்றாமல் விடுவது, நாம் கற்ற கல்விக்கு ஏற்றதல்ல.

நமது பல்கலைக் கழகத்திலே நடக்கும் இத்தகைய குழுக் கூட்டங்களுக்கு, யாழ் வைத்தியசாலையில் தொழில் பார்க்கும் மருத்துவ நிபுணர்கள் வந்து போகிறார்கள். மருத்துவ சிகிச்சை போன்று, மருத்துவ நிர்வாக ஆலோசனை வழங்குவதும் அதி முக்கியம் என்பதை எந்த மூன்றாம் ஆண்டு மருத்துவ மாணவனும்கூறுவார் ஆகவே தமது சுகாதார வைத்திய அதிகாரி கூட்டங்களுக்கு வராதது பற்றி யாழ். மாநகர சபை அங்கத்தவர்கள் கவலை கொண்டது நியாயமானதே. மேலும், 'கூட்டங்களிலே தேநீர் அருந்திக் கதைகள் கேட்பது' என்ற டாக்டர் தெய்வேந்திரனுடைய விகடச் சொற்கள் அவர்களை உணர்ச்சிவசப்படுத்தியது குறித்தும் நாம் என்னகுறை காண முடியும்?

எனினும், அதற்காக அவர் சுகாதார வைத்திய அதிகாரிப் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று கூறுவது, ஒருவரின் வாழ்நாள் பணியை, அவர்புரிந்த கண்ணியமான கடமைகளை, கிடைப்பதற்கரிய அவரது ஆற்றலை, மக்கள் மேல் அவர் வைத்திருந்த அன்பை சில நொடிகளில் மறப்பதாகும். மேலும் டாக்டர் தெய்வேந்திரன் போன்ற ஓர் உன்னதமான சமூக மருத்துவரை நீங்கள் எங்கே தேடப்போகிறீர்கள்?

நிர்வாகத்தில், அதிலும் அரசியல் கலந்த நிலைப்பாடுகளில், இத்தகைய சம்பவங்களும் சந்தர்ப்பங்களும் சகஜம். அதிலும், தமிழ்மக்கள் அனுபவிக்கும் மிகவும மனத் தடுமாற்ற நிலையில், நாம் எதையும் சரியாகப் புரிந்து கொள்வதும், உணர்ந்து கொள்வதும், பக்குவமாகப் பேசுவதும், நியாயத்துடன் செயற்படுவதும் கஷ்டமானதாகும். ஆனால் மக்கள் சேவையில் ஈடுபடும் ஒருவர், அவர் நிர்வாகியாகவோ, அதிகாரியாகவோ, பணியாளராகவோ இருப்பினும் தனது குற்றங்களை ஏற்கவும், பிறர் தவறுகளை மன்னிக்கவும் ஏற்ற மனப்பக்குவத்துடன் இருக்கவேண்டும். அந்த மன அமைதி இல்லாவிடில் பாதிக்கப்படுவது அப்பாவி மக்கள் தான்.

இந்த மனநிலைதான் தற்போதைய துரதிர்ஷ்ட நிலைமையைச் சரிசெய்ய முடியும். மாநகர சபையில் உள்ள வயதில் முதிர்ந்த அங்கத்தவர்களும், ஆன்மீக சிந்தனையில் சிறந்த டாக்டர் தெய்வேந்திரன் அவர்களும் மக்களின் நன்மை கருதி நிலைமையைச் சீராக்கி — பிணக்கை நீக்கி— மக்கள் சேவையைத் தொடர்ந்து புரிவார்கள் என நம்புகிறேன். மக்களின் நம்பிக்கையும் இதுவாகத்தான் இருக்கும். ஏனெனில் அவர்கள் சுகமாகவும் சந்தோஷமாகவும் வாழ விரும்புகிறார்கள். ★

**பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம்**

(நந்தி)

---

கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில்

# 10 பாடசாலைகளைப் புனரமைக்க 13லட்சம்ரூபா நிதி ஒதுக்கப்பட்டது

வலி. கிழக்கு, நவ. 25

கோப்பாய்க் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட 10 பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்யவென இவ்வாண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 13 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, சரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், ஆவரங்கால்யாகாஜன வித்தியாலயம், புத்தூர் அமெரிக்க மிஷன் த. க. பாடசாலை, உரும்பிராய் இந்துக் கல்லூரி, பத்தமேனி இரட்னேஸ்வரி வித்தியாலயம், சிறுப்பிட்டி இ. த. க. பாடசாலை, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, கோப்பாய் சரவணாநந்த வித்தியாலயம், கோப்பாய் நாவலர் பாடசாலை ஆகிய 10 பாடசாலைகளுக்குமே வகுப்பறைகள், விஞ்ஞான ஆய்வு கூடங்கள் புனரமைப்புச் செய்யவென 13 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ — 180)

## உழைக்கும் மகளிர் நிறுவனம் நெடுந்தீவில் அமைக்கப்படும்

நெடுந்தீவு, நவ. 25

நெடுந்தீவில் உழைக்கும் மகளிர் நிறுவனம் ஒன்றை அடுத்த வாரத்தில் அங்குரார்ப்பணம் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரதேச சபை பனை அபிவிருத்திச் சபையின் ஆதரவுடன் இந்நிறுவனம் ஆரம்பிக்கவுள்ளதாக நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் ஆ. வெ அரியநாயகம் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் பன்னவேலைப்பயிற்சி பெற்ற பெண்கள் பலர் சுயதொழில் முயற்சிக்கான முதலீடு அற்ற நிலையில் இருப்பதாகவும் இவர்கள் சுயமுயற்சிக்கென வங்கிக்கடன் பெறவும் உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்து சந்தைப்படுத்தவும் வசதியாக இந்த நிறுவனம் அமையும் எனவும் அவர் தெரிவித்தார்.

(ஐ—111)

---

**உதயவாக்கு**

காலம் விரைவாய் ஓடிக் கொண்டிருப்பதைக் கவனத்துடன் பார்த்துக் கொண்டிருப்பவனுக்குக் காலம் மெதுவாகவே அசைகிறது !

— டாக்டர் ஜான்சன்

---

## நாளை

**கார்த்திகை 11**

**ஞாயிற்றுக்கிழமை**

திதி: பிரதமை காலை 6. 05 வரை.

நட்சத்திரம்: அனுஷம் மாலை 6.40 வரை

சுபநேரம்: 9.12—10.42

ராகுகாலம்: 4.42—6.12

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

**KONICA COPY MACHINE, NATIONAL** குளிர்சாதனப் பெட்டி என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ.அருள்ராஜன் இல.111/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (80802)

குறுகிய காலத்தில் காய்க்கக் கூடிய தென்னங்கன்றுகள் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: **S.M.** சுப்பிரமணியம் (பீற்றூட் மணியம்) நிதியம்பனை, மல்லாகம். (c/13754)

நல்ல நிலையிலுள்ள **'Marshall & Rose' Piano,** குளிர்சாதனப் பெட்டி, தையல் மெசின் உட்பட பல வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு.தொடர்பு: பழைய பிள்ளைகள் இல்லம், சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய். தொடர்புகொள்ளக் கூடிய நாள்கள்: செவ்வாய், வெள்ளி, சனி மாலை நேரங்களில். (80823)

நல்ல இன பேட்டுக் குஞ்சுகள் 50 விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 21,றக்கா வீதி, யாழ்ப்பாணம். **(I.C.R.C** க்கு அருகில்). (80827)

## வீடு விற்பனைக்கு

உரும்பிராய்வடக்கு, விளாத்தியடி வீதியில் சகல வசதியுடன கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: காவலன் திருமண சேவை, மருதனார் மடம வீதி, உரும்பிராய்சந்தி.(80836)

## இலக்கியக் கட்டுரைகள்

நாடகம் எழுதும் போட்டிகளில் ஐந்து முறை முதலாம் பரிசு பெற்ற அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல். 10-11ஆம் தரங்களில் தமிழ் இலக்கியம் கற்கவும், கற்பிக்கவும் உதவக்கூடிய 38 கட்டுரைகள். (80820)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா350/-) தொடர்பு: பாரதி, 430, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல.3081 (c/13637)

## ஜோதிடம்

எண் ஜோதிடம், ரேகை சாஸ்திரம், ஜாதகக் குறிப்புக்கள், விவாகப் பொருத்தங்கள். பருத்தித்துறை, தும்பளை வீதியிலுள்ள 'கந்தையா நூலகத்தில்' நாளை (26-11-2000) ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் பார்வையிடப்படும். நேரிலேயே சந்திக்கலாம். "சத்யா" (ஜோதிட நூலாசிரியர்) சனி வக்கிர மாற்றம் எங்கும் விற்பனையாகின்றது. (80838)

## தவறிவிட்டது

நவாலி வடக்கு, மானிப்பாய் எனும் முகவரியைச் சேர்ந்த சண்முகசுந்தரம் சதன் என்பவருடைய விசேட அடையாள அட்டை 20.11.2000 அன்று நவாலிக்கும், மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ராசி சில்க்ஸ், நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் கொடுத்து உதவவும். (80841)

வையாபுரி கமலாம்பாள் ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும் (இல.415101910x)விசேட அடையாள அட்டையும் 16.11.2000 அன்று தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய சுற்றாடலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஆலய கந்தோரில் அல்லது குவீன்சோ கோல் கட்டிங் ஜுவலர்ஸ், 44/1, யாழ்.வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (80843)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி, கல்பேட் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்தல் இலவசம். 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம் (கண்ணா வீடியோ சென்ரர் வளவு). (80790)

## நாய்க்குட்டிகள் விற்பனை

நல்ல இன **ALSATION** நாய்க் குட்டிகள் (கறுப்பு நிறம் உட்பட) விற்பனைக்கு உண்டு. தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (80852)

## மணமகள் தேவை

நோர்வே நாட்டில் அரச வைத்திய சாலையில் பணிபுரியும், கேட்டை நட்சத்திரம், வயது 35, உயரம் 5'3", சைவ கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு படித்த, பண்பான, அழகுள்ள மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமகன் கொழும்பு வந்து மணம் செய்து அழைத்துச் செல்வார். சீதனம் நேரில் பேசித் தீர்க்கப்படும். தொடர்புக்கு: விளம்பர இல. 1145, மே/பா உதயன். (80848)

## தேவை

நல்லநிலையிலுள்ள றோணியோ மெசினும் கணனி 486 **Model** உம் தேவை. வைத்திருப்போர் கீழ்க் காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். **C.** ஜோசப், **72A**,றக்கா றோட், யாழ்ப்பாணம். **T.P.** - 2597 (80851)

**Lawn Mover (Grass Cutter)** ஒன்று தேவை. அத்துடன் தினை/சாமி தேவை. க.தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை(நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (80854)

## யுரேனியம் கல்வி நிலையம்

மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்! க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

முடிவு திகதி: 30-11-2000

* மேலதிக விவரங்களுக்கு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

- நிர்வாகி.

*கனகசபை வீதி,*
*மானிப்பாய்.* (80857)

# சமுர்த்தி செயலணிக் குழு அமைப்பு

வலி.கிழக்கு,நவ.25

புத்தூர் மேற்கு ஜே-273 கிராம அலுவலர் பிரிவில் சமுர்த்தி அபிவிருத்தி செயலணிக் குழுக்கள் அமைக்கும் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகததர் சி.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

வலி.கிழக்கு பிரதேச செயலர் கே.கேதீஸ்வரன், திட்டமிடல் பணிப்பாளர் ஆ.கதிரமலைநாதன், நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.வல்லிபுரம், வலய சமுர்த்தி முகாமையாளர் செல்வி எஸ்.வசந்தி, சமுர்த்தி முகாமையாளர் செல்வி எஸ்.இராணி ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக் கூட்டத்தில் சமுர்த்தி செயலணியின் செயற்பாடுகள், விளக்கப்படுவதோடு செயலணிக் குழுக்களும் அமைக்கப்படவுள்ளன.

(ம-180)

# மன்னாரில் பாதுகாப்பு தீவிரம்

வவுனியா,நவ.25

மன்னார் பிரதேசம் மற்றும் கற்பிட்டி கடற்பரப்பு ஆகியவற்றின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக மன்னார் படைமுகாம் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவித்தது.

இந்தப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல்கள் அதிகமாகக் காணப்படுவதாகக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களை அடுத்து கடற்படையினர் மற்றும் இராணுவத்தினர் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

கற்பிட்டிக் கடற்பரப்பில் புலிகளின நடமாட்டத்தை அண்மைக் காலமாகத் தொடர்ந்து கண்காணித்து வந்த படையினர் அப்பகுதியில் விமானத் தாக்குதல்களையும் நடத்தியுள்ளனர்.

மன்னார் நகரப்பகுதியிலும் விசேட ரோந்து நடவடிக்கைகளும் சோதனைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

(ஐ-8)

# நெடுந்தீவு மேற்குக் கரையில் கடல்நீர் உட்புகும் ஆபத்து

யாழ்ப்பாணம்,நவ.25

பருவமழை ஆரம்பித்திருப்பதை அடுத்து நெடுந்தீவு மேற்கு அத்தாங் கரை மதகு ஊடாக கடல்நீர் உட்புகுவது அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 13ஆம் திகதி இவ்விதம் கடல்நீர் ஒரு கிலோ மீற்றர் தூரம் நிலப்பகுதிக்குள் உட்புகுந்ததை அடுத்து உடனடி நடவடிக்கையாக மண்மூடைகள்அமைக்கப்பட்டு கடல் நீர் உட்புகுவது தடுக்கப்பட்டதாக நெடுந்தீவு ஐக்கியதீப சனசமூக நிலையத்தைச் சேர்ந்த எஸ். அறிவரசன் தெரிவித்தார்.

நெடுந்தீவு மேற்கு ஐக்கியதீப சனசமூக நிலையத்தினர், நெடுந்தீவு மேற்கு கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர் எனவும் -

மண்மூடைகள் அமைப்பதற்கான சாக்குகளை நெடுந்தீவு பல நோ. கூட்டுறவுச் சங்கத்தினர் இலவசமாக வழங்கியிருந்தனர் எனவும் -

அவர் தெரிவித்தார்.

இந்த மதகை முழுமையாகக் கட்டி முடிக்க சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் - கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஐ-7)

# யா/இராமநாதன் கல்லூரி

சுன்னாகம்

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் - 2000

இடம்: **கல்லூரி மண்டபம்**

காலம்: இன்று (25-11-2000) சனிக்கிழமை காலை 9 மணி

தலைவர்: திருமதி ஆ. சிவஞானசுந்தரம் (அதிபர்)

பிரதம விருந்தினர்:
பேராசிரியர் சமாதிலிங்கம் சத்தியசீலன்
B.A. Hons (Cey) M.A.Ph.D. (Cey)
(வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.)

கௌரவ விருந்தினர்:
கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி

சிறப்பு விருந்தினர்:
திரு. அ. தற்பரானந்தன்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், உடுவில்.)

நிறுவுநர் நினைவுப் பேருரை:
திரு.தி. கமலநாதன் M.A.
(பீடாதிபதி, தேசிய கல்வியியற் கல்லூரி.)

பரிசில் வழங்கல்:
திருமதி அனுஷ்யா சத்தியசீலன்
B.A.(Hons) Dip.in.Ed.M.Phill (Cey)
(விரிவுரையாளர், கல்வியியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்)

***அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.***

***அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.***

(80856)

# விற்பனைக்கு

Morris Oxford Car 8/2412, Peugeot 504 கார் 12/8616 (Both Cars are in immaculate Condition), 404 Engine, 404 சீற் கதவுமட்டை செற் புதியது. Oxford & 404 Differential Sets, Oxford Starter Motor, 404 Steering box, புத்தம் புதிய Rice Cooker, Prestige Pressure Cooker, Sri Ram Honda Generator 650, Singer Fridge, Battery Charger, Power Sprayer, Table Fans, Pedestal Fans, M.D. 90 மோட்டார் சைக்கிள், Floor Polisher, வீட்டுத்தளபாடங்கள், சமையலறைத் தளபாடங்கள் மற்றும் பல விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : **'பற்றிமா வாசம்' சில்லாலை, பண்டத்தரிப்பு.**

(80860)

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 20 - 03 - 1921



உதிர்வு 27 - 10 - 2000

## அமரர் கந்தையா வினாசித்தம்பி

(ஓய்வு பெற்ற ஆசிரியர், மீசாலை)

அன்போடு எம்மை அரவணைத்து, பாசத்துடன் எம்மை வளர்த்து, கல்வியூட்டி, நல்ல தொழில் ஸ்தானத்தில் அமர்த்தி வாழ்க்கைக்கு வழிகாட்டிய அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரது மறைவை அறிந்து அவரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் கூறிய அனைவருக்கும், கண்ணீர் அஞ்சலியை பத்திரிகையில் வெளியிட்ட பலாலி ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் பங்குபற்றிய கலாசலை அதிபர், விரிவுரையாளர்களுக்கும், தென்மராட்சி பாடசாலைகளின் அதிபர்கள், உபஅதிபர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் மற்றும் அனுதாபச் செய்திகள் வெளியிட்ட அனைவருக்கும், இறுதிக் கிரியைகளில் முன்னின்று உதவிய தென்மராட்சி, இணுவில் பிரதேச மக்கள் அனைவருக்கும எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் தற்காலிக இருப்பிடத்தில் நாளை (26-11-2000) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

தற்காலிக முகவரி:
*மே/பா - செ. குணராஜா,*
*இணுவில் தெற்கு, இணுவில்.*

நிரந்தர முகவரி:
*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.*

(c/13968)

# தாழாத் துயர் சுமக்கும்...

# 6 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 09 - 07 - 1973



மனதில் 02 - 12 - 1994

## செல்வி றோகினி சிவசுப்பிரமணியம்

(பவி)

மாலை சூடி - மஞ்சள் சூடி - மண்ணில் வாழும்
ஆசை வாடி.... ஆறாத் துயரில் நாங்கள்
வாட - அன்பின் கண்ணே நீறாய் ஆனாய்!
ஆறாமாண்டின் கண்ணீர்ப் பூக்கள்!
ஆறாதென்றும் உந்தன் எண்ணம்!
நெஞ்சில் வாழ்வாய் - நிமலன் பாத மலராய் ஆவாய்!
அஞ்சலித்தோம்!

- குடும்பத்தினர் -
*மீசாலை கிழக்கு, மீசாலை.*

தற்காலிக முகவரி:
*காங்கேசன்துறை வீதி,*
*கோண்டாவில்.*

(80807)

## இடமாற்றச்சபை

யாழ்ப்பாணம்,நவ.25

யாழ்.மாவட்ட வலயங்களுக்கிடையிலான இடமாற்றச்சபை எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் கூடவிருக்கின்றது. (இ-3)

## வீதியை திருத்துமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.25

பருத்தித்துறை தாழையடி பிரதான வீதியில் வல்லிபுரத்தில் இருந்து ஆம்பன் செல்லும் வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் குண்டும் குழியுமாக இருப்பதாக அந்தப்பகுதி மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

தமது முக்கிய போக்குவரத்துப் பாதையாக விளங்கும் இந்த வீதியைத் திருத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தப் பிரதேச மக்கள் கேட்டுள்ளனர். (இ-3)

## 2 ஊழியர்களின் நிலுவையை வழங்க நடவடிக்கை

யாழ்ப்பணம்,நவ.25

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய சமயம் கைதாகிக் காணாமற்போன இரு ஊழியர்களின் சம்பளத்தையும், நிலுவையையும் வழங்குவதற்கான அனுமதியை யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கொழும்பில் உள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கோரியுள்ளார்.

இந்த இரண்டு ஊழியர்களான ச.விஜயகாந்தன், ரவீந்திரன் ஆகியோரின் விடயம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து யாழ். அரச அதிபர் வைத்தியசாலைப் பணிப்பாளருக்குக் கடிதம் அனுப்பியிருந்தார். அதற்கு அமைவாகவே பணிப்பாளர் இந்த அனுமதியைக் கோரியுள்ளார். (ஐ-10)

## கடன் தொகை மீள அறவிடவில்லை

வலிமேற்கு,நவ.25

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தினால் பிரதேச செயலகத்தின் ஊடாக சுயதொழில் முயற்சிக்குக் கடனாக வழங்கப்பட்ட பல லட்சம் ரூபா நிதி அறவிடப்படாமல் இருப்பதாகத் தெரியவருகின்றது.

நலிவுற்றோர், விதவைகள், கடற்றொழிலாளர்கள், விவசாயிகள், கட்டடத் தொழிலாளர்கள் ஆகியோருக்கே கடனாக தலா 10 ஆயிரம் ரூபாவரை கடனாக வழங்கப்பட்டது. (ஐ-175)

## பங்கீட்டு அட்டை மீளாய்வு

வலி.மேற்கு,நவ.25

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு செய்யப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலர் நா.வேதநாயகன் மேற்கொண்டுள்ளார்.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள அனைவரையும் தத்தமது பிரிவு கிராம உத்தியோகத்தர்களிடம் சென்று மீளாய்வுக்கு ஒத்துழைக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். அடுத்த மாதத்துக்கான இலவச உலர் உணவு விநியோகம் மீளாய்வு செய்யப்பட்ட பின்னர் வழங்கப்படவுள்ள புதிய பங்கீட்டு அட்டைக்கே விநியோகிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-175)

## தமிழ் இளைஞர்களை விடுவிக்க உத்தரவு

மட்டக்களப்பு,நவ.25

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்படாத நிலையில் கடந்த 9 மாதங்களாகக் களுத்துறை, மட்டக்களப்பு தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப் பட்டிருந்த இரண்டு தமிழ் இளைஞர்களை உடனடியாக விடுவிக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிவான் அப்துல் காதர் உத்தரவிட்டுள்ளார்.

சந்திவெளியைச் சேர்ந்த கனகரட்ணம் தேவகுமார், தெய்வநாயகம் ஜெகநாதன் ஆகியோரையே விடுவிக்குமாறு உத்தர விடப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் சிவானந்தன், மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்த பிரஸ்தாப சந்தேக நபர்கள் தொடர்பான மனு மீதான விசாரணைகளை மேற்கொண்ட மேலதிக நீதிவான் இந்தத் தீர்ப்பை வழங்கினார். (இ-8)

## பாடசாலை இடமாற்றம்

யாழ்ப்பாணம்,நவ.25

கைதடி, நாவற்குழி அ.த.க.பாடசாலை கடந்த 6ஆம் திகதி முதல் தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் இயங்குகின்றது என்று அந்தப் பாடசாலையின் அதிபர் வ.த.திருநாவுக்கரசு அறிவித்துள்ளார். (இ-3)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,நவ.25

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவிருந்த தென்மராட்சிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான தரம் 8 க்கான வாழ்க்கைத் தேர்ச்சிப் பாடத்துக்கான கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# கைதான மாணவர்களை விடுவித்து பரீட்சை நடைபெற ஆவன செய்க!

### யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் அரச அதிபருக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,நவ.25

நாம் நடத்தும் பகிஷ்கரிப்புப் போராட்டம் காரணமாக தற்பொழுது நடைபெற்றுவரும் செயன்முறைப் பரீட்சைகள் யாவும் தடைப்பட்டுள்ளன. எனவே காலம் தாழ்த்தாது எம் சக மாணவனை விடுவித்து பரீட்சைகள் ஒழுங்காக நடைபெற ஆவன செய்யுங்கள்.

கடந்த 4ஆம் திகதி மந்துவில் பகுதியில் வைத்துப் படையினரால் கைதுசெய்யப்பட்ட யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவன் இராசையா ஸ்ரீரங்கநாதனை விடுதலை செய்யக் கோரி தொழில்நுட்பக் கல்லூரியின் பகல் நேர மாணவர் ஒன்றியம் யாழ். அரச அதிபருக்குச் சமர்ப்பித்துள்ள மகஜரில் இவ்வாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மேற்படி மாணவனின் விடுதலை தொடர்பாக பல்வேறு மனிதநேய அமைப்புகளிடமும் தொடர்புகொண்டோம். எனினும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ள எமது சக மாணவனுக்கும் எமக்கும் இறுதிப் பரீட்சை ஆரம்பமாகவுள்ளது. எனவே சம்பந்தப்பட்ட மாணவனை விடுதலை செய்து நாம் அனைவரும் ஒன்றாக இறுதிப் பரீட்சைக்குத் தோற்ற ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (இ-7-5-6)

# பொலீஸ் சேவைக்கு மேலும் 7,000 பேரைச் சேர்க்க ஏற்பாடு

கொழும்பு,நவ.25

புதிதாக ஏழாயிரம் பேரை பொலீஸ் சேவையில் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலீஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொலீஸ் சேவையில் தற்போது நிலவும் ஆள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளவர்களில் 2,500 பேர் விசேட பொலீஸ் அதிரடிப்படைப் பிரிவிலும் ஏனையவர்கள், விசேட பொலீஸ் பிரிவிலும் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர். (ம-8)

# பாடசாலைகள், ஆலயங்களின் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,நவ.25

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியில் இருந்து நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பாடசாலைகள் மற்றும் ஆலயங்களின் புனரமைப்புக்கென 12 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தெரிவித்தார்.

திட்டங்களும் அவற்றுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி விவரமும் வருமாறு:-

★ நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரியில் கட்டடம் அமைத்தல் - 3 லட்சம் ரூபா.

★ நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ளம் அ.த.க.பாடசாலை புனரமைப்பு- 2 லட்சம் ரூபா.

★ நெடுந்தீவு மாவலித்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் வகுப்பறை, மலசலகூடம், தளபாடம் அமைத்தல் - 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

★ நெடுந்தீவு பெருக்கடி விநாயகர் ஆலயம் புனரமைப்பு - ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

★ நெடுந்தீவு புனித அந்தோனியார் ஆலயப் புனரமைப்பு - 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

★ நெடுந்தீவு சென்.மேரி தேவாலயம் புனரமைப்பு - ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

பாடசாலைகளைப் புனரமைத்தல் தொடர்பான வேலைத்திட்டங்கள் வலயக் கல்வி அலுவலகம் மூலமும்-

ஆலயங்களின் புனரமைப்புத் தொடர்பான வேலைத் திட்டங்கள் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் மூலமும் -

நிறைவேற்றப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

# நயினாதீவுக்குச் செல்வோருக்கு வசதியாக வெள்ளிக்கிழமைகளில் கூடுதல் பஸ் சேவை

### தீவக மக்களின் அமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.25

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்களின் நன்மை கருதி வெள்ளிக்கிழமைகளில் குறிகாட்டுவான் வரையிலான பஸ் சேவையை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தீவக மக்களின் நலன் காக்கும் அமைப்பு வட பிராந்திய போக்குவரத்துச் சபையிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குறிப்பாக வெள்ளிக்கிழமைகளில் மேற்படி ஆலயத்துக்குச் செல்லும் பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் வழிபாடுகளை முடித்துக் கொண்டு பிற்பகல் 2 மணிக்கே குறிகாட்டுவான் வந்தடைகின்றனர்.

ஆனால் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் குறிகாட்டுவானிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒரு பஸ் சேவை மட்டுமே நடத்தப்படுகிறது. இதனால் ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் மற்றும் நெடுந்தீவுப் பகுதிப் பயணிகள் அனைவரும் இந்த பஸ் மூலமே யாழ்ப்பாணம் வந்து சேரவேண்டியுள்ளது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# அப்பாவிகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முரளிதரனுடன் அந்தக் ஹோட்டலில உணவருந்தியதாகக் கருதப்படும் ஐவரை யாழ்.பொலீஸார் கைதுசெய்து கடந்த புதனன்று யாழ்நீதிமன்றத்தில ஆஜர் செய்தனர்.

அவர்கள் தொடர்பான விடயத்தில தாம் விடுத்த உத்தரவு ஒன்றிலேயே மேற்படி அவதானிப்பை யாழ்.நீதிவான் வெளியிட்டார்.

பொலீஸ் கான்ஸ்டபிள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துக்குப் பொறுப்பான சந்தேகநபர், அங்கு உயிரிழந்த முரளிதரன் என்றும் -

எனவே இவ்விடயம் தொடர்பான புலன்விசாரணைகள் முடிவடையும் வரை முரளிதரனுடன் ஹோட்டலுக்கு வந்த ஐவரையும் விளக்கமறியலில் வைக்கும்படியும் யாழ்.பொலீஸார் கோரியிருந்தனர்.

அந்தக் கோரிக்கையை நிராகரித்து அந்த ஐவருக்கும் பிணை அனுமதி வழங்கும் உத்தரவை யாழ்.நீதிவான் வெளியிட்டது பற்றிய தகவல் நேற்றைய உதயனில் பிரசுரமாகியிருந்தது. அந்த உத்தரவில் நீதிவான் குறிப்பிட்ட - மேலும் முக்கியமான - சில அம்சங்கள் வருமாறு:-

பொலீஸ் கான்ஸ்டபிளைச் சுட்டவர் முரளிதரன் என்பதற்கான சாட்சியம் எதுவும் இங்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

ஆனால் முரளிதரனின் மரணத்திற்கு சம்பவதினம் காயமடைந்த பொலீஸ் உத்தியோகத்தரின் துப்பாக்கிச் சூடே காரணம் என்பதை நிருபிக்க போதிய சாட்சியங்கள் இருப்பதாக நான் திருப்தி அடைகிறேன். எனவே முரளிதரன் கொலைக்குக் காரணமான பொலீஸ் உத்தியோகத்தரைக் கைதுசெய்து நீதிமன்றின் முன் நிறுத்துமாறு பணிக்கின்றேன்.

குடாநாட்டில் கடமையாற்றும் பொலீஸாரின் பாதுகாப்புக் குறித்து இந்த நீதிமன்றம் அக்கறைப்படும் அதேவேளையில், குடாநாட்டில் கடமையாற்றும் பொலீஸார் தமது கையிலுள்ள ஆயுதங்களை அப்பாவி மக்களுக்கு எதிராகப் பிரயோகிப்பதை இந்த நீதிமன்றம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என நான் கருதுகிறேன்.

சம்பந்தப்பட்ட முரளிதரன் ஓடிக் காரில் ஏறியிருந்தால்கூட அவரைக் கைதுசெய்வதற்கு சம்பந்தப்பட பொலீஸ் கான்ஸ்டபிளுக்கு இலகுவாகக் காரை செயற்படமுடியாமல் செய்வதற்கு போதிய வாய்ப்பு இருந்திருக்கின்றது.

இலங்கைச் சட்டத்தில், தாக்கப்படும் ஒருவருக்குள்ள தற்காப்பு உரிமைகூட, அவருக்கு விளைவிக்கப்பட்ட குற்றத்துக்கு மேலாகப் பிரயோகிக்கக்கூடாது என்று தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தைப் பொறுத்தவரையில், காயமுற்ற பொலீஸ் உத்தியோகத்தர், இச் சம்பவத்தில் சம்பந்தப்படாத ஓர் அப்பாவியை தமது கையில் ஆயுதம் இருந்தது என்ற காரணத்தினால் சுட்டுக்கொலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது என்பதை இந்த நீதிமன்றம் மிகவும் பாரதூரமாகக் கருதுகின்றது.

எனவே சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய பொலீஸார் எதிர் காலத்தில் உணர்ச்சிகளுக்கு இடம் கொடுத்து அப்பாவிகள் எவரையும் தண்டிக்கக் கூடாது என்ற காரணத்துக்காக, பொலீஸ் சேவையில் கடமையாற்றும் அனைவருக்கும் இது விடயத்தில் உயரதிகாரிகள் மூலம் உரிய பயிற்சிகளையும் அறிவுறுத்தல்களையும் வழங்கி, எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவம் நடைபெறாது இருக்க நடவடிக்கை எடுக்குமாறு வடமாகாணப் பிரதி பொலீஸ் மா அதிபருக்குப் பணிக்கிறேன்.

எனவே பொலீஸார் ஆஜர் செய்த சந்தேக நபர்களுக்கு பிணை அனுமதி வழங்குவதுடன், அவர்களில் சிலர் கொழும்புக்குச் செல்ல வேண்டியதற்கான காரணங்கள் இங்கு எனக்கு உறுதிப்படுத்தப்பட்டிருப்பதால், அவர்கள் கொழும்பு செல்வதற்கு இந்த நீதிமன்றம் எதுவித தடையையும் விதிக்கவில்லை என்பதையும் தெளிவுபடுத்துகிறேன்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5-10)


## அபிராமி தொலைத் தொடர்பகம்

212, சேர் பொன்.இராமநாதன் வீதி, திருநெல்வேலி

மேற்படி ஸ்தாபனத்துக்கு தொலைபேசி, தொலைநகல் (Fax) இயக்குநர் தேவை. (அனுபவம் மிக்கவர் விரும்பத்தக்கது) சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். ஞாயிறு காலை நேரில் வரவும்.

*- நிர்வாகி.*

(80873)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி தனலட்சுமி செல்வராசா

(கொக்குவில் கிழக்கு, கொக்குவில்)

உடையார் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் நுவரெலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலட்சுமி செல்வராசா நேற்று (24.11.2000) வெள்ளிக்கிழமை நுவரெலியாவில் காலமானார்.

இவர் கந்தையா சிவபாக்கியத்தின் அன்பு மகளும், மருதமுத்து செல்வராசா (நில அளவை அத்தியட்சகர், நுவரெலியா) அவர்களின் அன்பு மனைவியும், துசித்திரா, சஜிரஜன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், புவனேந்திரன், பத்மநாதன் (சின்னக்கிளி), கனகசபாபதி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், திருமதி நேசலட்சுமி, சிவகுமார், காலஞ்சென்ற தவலட்சுமி, பேரின்பநாதன் (ஜேர்மனி), மகேந்திரன் (ஜேர்மனி), வரத லட்சுமி (நுவரெலியா), இராசேந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் திரு.யோ.சிவகுமாரின் (இ.பொ.ச. கோண்டாவில்) மைத்துனியும், சோபனா, மயூரன் ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2000) சனிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு நுவரெலியாவில் நடைபெறும்.

**உடையார் ஒழுங்கை,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

(80875)

**தகவல்:**
**செல்லையா கந்தையா**
**(தகப்பன்)**

### திருமதி இரட்ணேஸ்வரி சூரியகுமாரன்

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி இரட்ணேஸ்வரி சூரியகுமாரன் 23.11.2000 வியாழன் இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், சூரியகுமாரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பாலேஸ்வரி, காலஞ்சென்ற தில்லையீசன், நகுலேஸ்வரி, ரகுதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், புவனேஸ்வரி, சத்தியசீலதேவன், சத்தீஸ்வரி, திருமதி பத்மசீலன் உருத்திராதேவி, ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற செல்வராசா, அருந்ததி தியாகராசா ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி, நாகேஸ்வரி ஆகியோரின் பெறாமகளும், சிவதர்சினி, சுதர்சன், சுகீவன், சேந்தன், வாகினி, பவதாரணி ஆகியோரின் அன்பு மாமியாரும் கஜேந்தினியின் சித்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று (24.11.2000) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சம்பியன் லேன்,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

(80877)

**தகவல்:**
**செ.சூரியகுமாரன்**
**(கணவன்)**

# பிரபா கோரியதனாலேயே ராஜ்குமார் விடுவிக்கப்பட்டார்!

## 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' பத்திரிகை தகவல்

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் செய்தியை அடுத்தே கன்னட நடிகர் ராஜ்குமாரை சந்தனக்கடத்தல் வீரப்பன் விடுதலை செய்தார் என்ற அதிர்சசியான செய்தியை 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' பத்திரிகை நேற்று வெளியிட்டுள்ளது.

அந்தப் பத்திரிகையின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வீரப்பனால் கடத்தப்பட்ட கன்னட நடிகர் ராஜ்குமாரின் பிரச்சினை பெரியளவில் உருவெடுத்ததை அடுத்து உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ பெர்னாண்டஸுக்குத் தெரிவித்ததை அடுத்து விடுதலைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

மறுமலர்ச்சி தி.மு.க செயலாளர் வை.கோபாலசாமியுடன் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தொடர்பு கொண்டார். அத்துடன் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் ஆகியோருடனும் அவர் தொடர்பு கொண்டார்.

வை.கோ. தமது கட்சியின் பிரமுகரும் பிரதி அமைச்சருமான கண்ணப்பனுக்கு இது குறித்துத் தகவல் கொடுத்தார். கண்ணப்பன் கிரேக்கத்தில் உள்ள விடுதலைப்புலி முக்கியஸ்தர் மூலமாக வன்னியில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்குக் கண்ணப்பன் தகவல் அனுப்பினார்.

அதன் பின்னர் பிரபாகரன் தமிழ்நாட்டில் உள்ள கௌத்தூர் மணி என்பவருக்கு கடிதம் ஒன்றை அனுப்பினார். அந்தக்கடிதத்தை நேரடியாகச் சென்று வீரப்பனிடம் கையளிக்குமாறு பிரபாகரன் அவரிடம் கேட்டிருந்தார்.

அதன்படி கௌத்தூர் மணி டாக்டர் பானுவுடன் காட்டுக்குச் சென்று வீரப்பனைத் தனிமையில் சந்தித்துக் கடிதத்தைக் கையளித்தார்.

அதன் பின்பே வீரப்பன் கன்னட நடிகர் ராஜ்குமாரை விடுவித்தார் இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## கொட்டடி மீன் சந்தைப் பகுதியில்

# அனுமதியின்றி இயங்கிய கடைகள் அகற்றப்பட்டன

யாழ்ப்பாணம்,நவ.25

கொட்டடி மீன் சந்தைப் பகுதியில் அனுமதியின்றி இயங்கிய கடைகள் பல யாழ்.மாநகரசபை அதிகாரிகளால் நேற்று அங்கிருந்து அகற்றப்பட்டன.

தேநீர்க்கடை, பலசரக்குக் கடை மற்றும் சைக்கிள் திருத்தும் கடைகள என்பனவே இவ்வாறு அகற்றப்பட்டன.

இதேவேளை - மேற்படி கடை உரிமையாளர்களுக்கு மாற்று ஏற்பாடுகளைச் செய்து கொடுக்குமாறும்-

வியாபாரம் தடையின்றி இடம்பெற சகல வகையான நடவடிக்கைகளையும் உடன் மேற்கொள்ளுமாறும் புளொட் அமைப்பைச் சேர்ந்த யாழ். மாநகரசபை உறுப்பினர்கள் மாநகரபிரதி மேயருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். (இ-7)

### திருமணமான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பவரே இந்தப் பெண் மாவீரர் ஆவார்.

அவரது இறுதி அஞ்சலி நிகழ்வு நடைபெற்ற போது உயிரிழந்தவரின் கணவர் ஈகைச்சுடர் ஏற்ற அவரது மகன் தாயின் பூதவுடலுக்கு மலர்மாலை அணிவித்தார் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (இ-7-8)

### ஒஸ்லோவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றுவதற்காக கனடாவில் இருந்து நேற்று லண்டன் புறப்பட்ட கனடா, ரொரன்டோ பல்கலைக்கழகப் பேராசிரியர் வண.பிதா எஸ்.ஜே.வி.சந்திரகாந்தன் கனடா பத்திரிகை ஒன்றுக்குத் தகவல் தெரிவிக்கையில் கூறியதாவது:-

அடுத்தவாரம் ஒஸ்லோவில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடக்கவிருக்கும் பேச்சுக்களின் போது ஆராயப்பட வேண்டிய விடயங்கள் குறித்து லண்டனில் விடுதலைப் புலிகளின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்படும்,

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்பவர்கள் ஆராய்ந்து எடுக்கும் முடிவுகள் ஒஸ்லோ பேச்சுக்களில் முன்வைக்கப்படும் என எதிர்பார்க்கலாம்.

இந்தக் கலந்துரையாடலில் பங்கு கொள்பவர்கள் ஒஸ்லோ பேச்சிலும் பங்குபற்றக்கூடும் - இப்படி அவர் கூறினார்.

ஒஸ்லோவில் இடம்பெறும் பேச்சுக்களில் பங்குபற்றவிருக்கும் அரசுத் தரப்புப் பிரதிநிதிகள் தொடர்பான விவரங்கள் ஏதும் இதுவரை வெளியாகவில்லை.

இதற்கிடையில் -

அரசுத் தரப்புக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானத் தூதுவராகச் செயற்படும் நோர்வே நாட்டின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்மும் இன்று லண்டன் வந்து சேருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-3)

### மறு அறிவித்தல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபை அதிகாரி எஸ்.குகராஜன் தெரிவித்தார்.

எனினும் நேற்று தமது அலுவலகத்தில் இலக்கம் பெற்றவர்களுக்கு மட்டும் விமானப்பதிவு இன்று மேற்கொள்ளப்படும் என்றும் அவர் சொன்னார். (இ-3)

### எழுச்சிநாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 6.35 மணிக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தனது மாவீரர்தின உரையை நிறைவு செய்வார் எனவும் - விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (இ-7)

### தொழில்நுட்ப.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகஜர் ஒன்றினைக் கையளிப்பதற்காக யாழ்.செயலகம் நோக்கிச் சைக்கிளில் ஊர்வலமாகச் சென்றனர்.

ஊர்வலமாகச் சென்ற மாணவர்களை யாழ்றக்கா வீதியிலுள்ள காவலரணில் நின்ற பொலீஸார் 45 நிமிட நேரம் தடுத்து வைத்திருந்தனர்.

பின்னர் பொலீஸாரின் அனுமதியைத் தொடர்ந்து யாழ்.செயலகத்தை அடைந்த மாணவர்கள் அங்கு ஒரு மணிநேரம் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதனைச் சந்தித்து சம்பந்தப்பட்ட மாணவனை விடுவிக்கக் கோரும் மகஜரினைக் கையளித்தனர்.

மகஜரின் பிரதி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிக்கும் அவரது அலுவலகத்தில் வைத்துக் கையளிக்கப்பட்டது. (இ-7-5-6-69-173-139)


## கணனி உதிரிப்பாகங்கள்

எமது **IIS** விற்பனைப் பிரிவில் அனைத்து விதமான கணனி உதிரிப்பாகங்களையும் நியாயமான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

முக்கிய குறிப்பு:

அரச, தனியார் நிறுவனங்கள் நிறுவன ரீதியாக தொடர்பு கொண்டால் விசேட விலைக் குறைப்புடன் பெற்றுக்கொள்ளலாம்.

கணனி உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் நிறுவனங்கள் மொத்தமாக கொள்வனவு செய்தால் விசேட கழிவு வழங்கப்படும.

உங்கள் தேவைகளுக்கு நாடவேண்டிய முகவரி

IIS SALES UNIT

100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

☎ 2831



## DCS

Centre for Advanced Computing & Information Technology

DCS

கணனிக் கற்கை நெறிகளுக்கான **2001/2002** கல்வியாண்டுக்குரிய சிறப்பான புலமைப்பரிசில் திட்டத்தை நாளைய உதயனில்

(C/13978)



## JAFFNA TECHNICAL INSTITUTE

JAFFNA TECHNICAL INSTITUTE · SRILANKA

### புலமைப்பரிசில் திட்டம் 2001

யாழ்.மாவட்டத்தில் கடந்த 21 வருடங்களாகப் பல்வேறு துறைகளில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு சிறப்பாகப் பயிற்சியளித்துவரும் எமது நிறுவனத்தில் மாணவர்களின் கணனி அறிவை விருத்திசெய்யும் நோக்குடன் இரண்டாவது தடவையாக கணனிப் பயிற்சி நெறிக்கு 2001 ஆம் ஆண்டில் போட்டிப் பரீட்சை (பொது அறிவு , நுண்ணறிவு) மூலம் புலமைப்பரிசில் வழங்கவுள்ளோம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

* விண்ணப்பப் படிவங்களைக் கீழ்க்காணும் இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

- பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்
- மகாத்மா புத்தகசாலை - திருநெல்வேலி
- ஞானம் புத்தக நிலையம் - K.K.S. றோட் (நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்)
- நாயகபாலன் புத்தகசாலை - மானிப்பாய்
- ஜீவா ஸ்ரோர்ஸ் - மல்லாகம்
- மொடேரன் ஸ்ரோர்ஸ் - நெல்லியடி
- ராஜன் எலக்ரோனிக்ஸ் - அச்சுவேலி

-DIRECTOR.

J.T.I
No.07, PALALY ROAD,
JAFFNA.

(C/13964)



# நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி

அன்பர்களும், நிறுவனங்களும், பாடசாலைகளும், ஆலயங்களும், சமூக நிலையங்களுமாக நேற்று(24-11-2000) 'நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி'க்கு தமது அன்பளிப்புக்களை வழங்கியிருந்தனர். அவர்களின் விவரங்கள் நாளைய உதயனில் வெளிவரும்.

**நேற்றுவரை இந்நிதிக்குக் கிடைத்த மொத்தத் தொகை ரூ. 935,720**


# கடற்றொழில் உபகரணங்கள் மீனவர்களிடம் கையளிப்பு

குருநகர் கடற்பகுதியில் வைத்து கடந்த மாதம் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட குருநகர், பாசையூர் மற்றும் கொழும்புத்துறைப் பகுதி மீனவர்களின் கடற்றொழில் உபகரணங்கள் நேற்று மீண்டும் மீனவர்களிடம் கையளிக்கப்பட்டன.

70 மீனவர்களின் கடற்றொழிலுக்கான அனுமதி அட்டைகள், 15 மீன்பிடி வள்ளங்கள் மற்றும் மீன் பிடி வலைகள் என்பனவே யாழ்.பண்ணைப் பாலத்தில் வைத்து கடற்படை அதிகாரிகளால் மீன்பிடிச் சங்க பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டன.

சம்பந்தப்பட்ட மீனவர்கள் கடற்றொழில் உபகரணங்களை மீட்டுத் தருமாறு ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் முறைப்பாடு செய்தனர் எனவும்-

அதனைத் தொடர்ந்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.வி.குகேந்திரன், யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளர் கே.மணிபல்லவராஜன் ஆகியோர் 512 ஆவது பிரிகேட் தளபதி, கடற்படை அதிகாரி ஆகியோருடன் தொடர்பு கொண்டு கடற்றொழில் உபகரணங்களை மீளப் பெற்றுக் கொடுத்துள்ளனர் எனவும்- ஈ.பி.டி.பியினர் தெரிவித்தனர்.

கடற்றொழில் உபகரணங்கள் கையளிக்கப்பட்ட நிகழ்வில் ஈ.பி.டி.பியின் பொது சனத் தொடர்பாளர் ஆர்.சிறியும் கலந்து கொண்டார். (இ-7)

## ஜி.சீ.ஈ. பரீட்சை முடிவுகள் இன்றே வெளியாகும்

கொழும்பு,நவ.25

கடந்த ஓகஸ்டில் நடந்த ஜி.சீ.ஈ. (உயர்தரப்) பரீட்சை முடிவுகள் இன்று கொழும்பில் வெளியாகும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

பரீட்சைத் திணைக்களத்தில் நேற்று அடிக்கடி ஏற்பட்ட மின்தடை காரணமாகப் பரீட்சை முடிவுகளை நேற்று வெளியிட முடியாமல் போனதாகவும் -

இன்று காலை முதல் முடிவுகள் வெளியிடப்படும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

### பேச்சுக் குறித்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிருந்த அவர் தாயகம் திரும்ப முன்னர் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதே பிரிட்டனினதும் உலக நாடுகளினதும் விருப்பமாகும். தாமதிக்கின்ற ஒவ்வொரு நிமிடமும் உயிர்கள் பலியாகின்றன.

பேச்சுவார்த்தைகளையும் கௌரவத்துடன் கூடிய சமாதானத்தையும் நான் உடனடியாக எதிர்பார்க்கிறேன். சகலரின் நலனுக்கும் உகந்த விடயம் இது.

யுத்தம் தொடரும் பட்சத்தில் இலங்கையால் அதனைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலை ஏற்படும். இலங்கை அரசாங்கம் இதனை உணர்ந்துள்ளது - என்றார். (இ-3)

### ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்து கொண்டார்.

அடுத்த மாதம் 18 ஆம் 19ஆம் திகதிகளில் பாரிஸில் இடம்பெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கு முன்னோடியாக அடுத்த மாதம் 3 ஆம், 4 ஆம் திகதிகளில் பாரீஸில் நடைபெறும் முதற்கட்ட கலந்துரையாடலில் ஜனாதிபதி கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-3)


## புலமைப்பரிசில் - 2001

பரீட்சை 11இல் அதிகூடிய புள்ளிகள் பெற்ற பரிசுக்குரியவர்கள்

- ★ சி.சாரங்கி - 190
- ★ பெ.முருகேந்திரா - 189
- ★ சி.சிவஜனனி - 186

அடுத்த பரீட்சை: நாளை (ஞாயிறு)

பரீட்சை இரு நேரங்களில்: 8.30 a.m., 10.30 a.m.

நாவலர்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(80849)



# அறிமுகம்!

யாழ்நகரில் முதல் முறையாக

IBMS இல்

## Diploma in Java Language

J A V A

இது சர்வதேச கணனி மொழியான Java விற்கான ஒரு முழுமையான வழிகாட்டற் பயிற்சி நெறி.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் BIT பட்டப் படிப்புக்கான பாடத்திட்டம் முழுமையாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

இக் கற்கை நெறியில் இணைவதற்கு வேறெந்த கணனி மொழிகளிலும் முன்னனுபவம் தேவையில்லை.

Weekend Classes

Duration: 3Months

ஆரம்பம்
**02.12.2000**
பி.ப. 01.00 மணி(SLT)

Institute of Business Management Studies · IBMS

"If you're not studying at IBMS You miss some thing"

NG


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.11.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.